விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 04 திங்கட்கிழமை (20.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 306

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL :- 222 5908/222 8812

## பூநகரியில் கிளைமோர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்தில் உள்ள வலைபாட்டில் படையினரின் ஆழ ஊடுருவும் அணி நடத்திய கிளைமோர் தாக்குதலில் அப்பாவி பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இருவர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

வலைப்பாட்டு பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் உழவு இயந்திரத்தில் சென்று கொண்டிருந்த பொதுமக்களை இலக்கு வைத்து ஆழ ஊடுருவும் அணி இக் கிளைமோர் தாக்குதலை *(12ஆம் பக்கம் பார்க்க)*

# அரசுக்கு அழுத்தம் கொடுக்க பதவியைத் துறக்கவும் தயார்

## இரா.சம்பந்தன் பி.பி.சிக்குப் பேட்டி

(கொழும்பு)

தமிழர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டும் என்றும் அதற்கு இந்திய மத்திய அரசு, இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கோரி தமிழகத்தில் தி.மு.கவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் இராஜினாமாவை தி.மு.க தலைவர் கருணாநிதியிடம் ஒப்படைத்துள்ளனர்.

இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் தேவைப்படும் பட்சத்தில் தங்களது பதவிகளை துறக்க தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தயாராக இருப்பதாக அதன் தலைவர் இரா.சம்பந்தன் தமிழோசையிடம் தெரிவித்தார்.

எனினும் தாங்கள் இராஜினாமாச் செய்தால் அவ்விடங்களுக்கு தங்களுடைய கைப்பாவைகளை *(12ஆம் பக்கம் பார்க்க)*

# இராமேஸ்வரத்தில் திரண்ட தமிழ்த்திரையுலகத்தினர்!

## ஈழத்தை உருவாக்குவோம் என முழக்கம்

(இராமேஸ்வரம்)

ஈழத்தமிழர்களின் படுகொலையைத் தடுத்து நிறுத்தி தமிழீழ நாட்டை உருவாக்குவோம் என்ற முழக்கத்துடன் இராமேஸ்வரத்தில் மிகப் பிரமாண்டமான பேரணி மற்றும் பொதுக் கூட்டத்தை தமிழ்த்திரையுலகத்தினர் நேற்று நடத்தினர். (12ஆம் பக்கம் பார்க்க)



## இந்.பிரதமரை சந்திக்க எம்.பிக்கள் முயற்சி

(கொழும்பு)

தமிழகம் சென்றுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இந்திய பிரதமரைச் சந்திப்பதற்கான முயற்சிகளை மேற் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆகஸ்ட் மாதம் இலங்கைக்கு வந்த இந்திய பிரதமர் மன்மோகன் சிங், தமிழ் தேசியக் கூட்டமைப் பினரை இந்தியாவுக்கு வருமாறு *(12ஆம் பக்கம் பார்க்க)*

## கதிர்காமத்தில் தாக்குதல்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாவட்டம் கதிர்காமம் பகுதியில் இராணுவக் காவலரண் மீது அடையாளம் தெரியாத ஆயுததாரிகளினால் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் ஒரு இராணுவ வீரர் கொல்லப்பட்டுள்ளார். இத்தாக்குதல் சம்பவம் நேற்று காலை 8 மணியளவில் நடைபெற்றது.

இதன் போது காவலரண் முற்றாக அழிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு கடமையிலிருந்த இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## தயாநிதி மாறனும் பதவி விலகினார்



(சென்னை)

அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிபின்படி நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான தயாநிதி மாறன் தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

தி.மு.க.சார்பில் மத்திய சென்னைத் தொகுதியில் இருந்து நாடாளுமன்றத்துக்கு தேர்ந்தெடுக் *(12ஆம் பக்கம் பார்க்க)*

# அக்கராயன்குளத்தில் 13 மணிநேரம் படையினர்-புலிகள் கடும் மோதல்

(கொழும்பு)

கிளிநொச்சி, அக்கராயன்குளத்தில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு முன்னரங்கு நிலைகளில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சுமார் 13 மணிநேரம் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.


மோதல்களின் போது படையினருக்கு உதவும் வகையில் விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர்களும் அப்பகுதிகளில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் பிரதான இலக்குகள் சிலவற்றின் மீது குண்டுத் தாக்குதல்களை நடத்தின.

இம் மோதல்களின் போது இரு தரப்பினருக்கும் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

மோதல்களை அடுத்து விடுதலைப் புலிகளின் 3 கிலோமீற்றர் நீளமான அணைக்கட்டொன்று உட்பட 14 பதுங்கு குழிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இது தொடர்பில் இராணுவ பேச்சாளர் மேலும் கூறியதாவது, கிளிநொச்சி, அக்கராயன்குளம் *(12ஆம் பக்கம் பார்க்க)*

# ஆதித் தமிழன் தோன்றிய பூர்வீக மண் இலங்கை



## கவிப்பேரரசு வைரமுத்து முழக்கம்


(இராமேஸ்வரம்)

ஆதித்தமிழன் பிறந்த பூர்வீக மண் இலங்கை மண். அந்த மண்ணுக்கு வந்தவர்களால் அந்த மண்ணில் பிறந்த வர்கள் தாக்கப்படுகிறார்கள் என்று கவிப்பேரரசு வைர முத்து கூறினார்.

இராமேஸ்வரத்தில் தமிழக கலையுலகத்தினர் நேற்று நடத்திய பிரமாண்டமான பொதுக் *(12ஆம் பக்கம் பார்க்க)*

# தமிழ்நாட்டுத் தலைவர்களை புலிகள் பயன்படுத்துகின்றனர்

## பாதுகாப்பு செயலாளர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தோல்வியைச் சந்தித்து வரும் நிலையில் தமிழக அரசியல் தலைவர்கள் மூலம் இலங்கைக்கு நெருக்கடி தரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார். இது பற்றி அவர் கூறியுள்ளதாவது,

விடுதலைப் புலிகள் தற்போது கடைசிக் கட்டத்தில் உள்ளனர். அவர்கள் தோல்வியடைவதை யாராலும் தடுக்க முடியாது. எனவே அவர்கள் தமிழக அரசியல் *(12ஆம் புக்கம் பார்க்க)*

# கல்வி நிலையில் பின்தங்கிய பாடசாலைகள்

# அபிவிருத்திச் சபைகளை அமைத்து செயற்பட வேண்டும்

## யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வி நிலையில் பின்தங்கிய பாடசாலைகள் தமது பாடசாலையைச் சார்ந்ததாகக் கல்வி அபிவிருத்திச் சபைகளை அமைத்துச் செயற்பட வேண்டும். இத்தகைய சபைகளில் ஆர்வம்மிக்க ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் பங்குகொண்டு கல்வி எழுச்சிக்காக உழைக்கவேண்டும். இவ்வாறு கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியில் நேற்று இடம்பெற்ற பரிசளிப்பு விழாவின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பரிசளிப்பு விழாவில் பேருரையாற்றிய யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார்.

கல்லூரியின் அதிபர் கே.ஆர். இராஜசேகரம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர், கல்வி அபிவிருத்திச் சபைகள் பாடசாலையை மையப்படுத்தி ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டும்.

இன்று பிரச்சினைகளைத் துல்லியமாக இனங்கண்டு பரிகாரம் காண்பதற்கு ஆய்வுச் செயன்முறையெ உன்னதமானது. இதன் மூலம் தீர்வினைக் காண்பது இலகுவாக அமையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியற் துறை, தேசிய கல்வியியற் கல்லூரி, வலயக் கல்வி அலுவலகம் போன்ற நிறுவனங்களில் உள்ள புலமையாளர்களின் உதவியுடன் ஆய்வுகளை மேற்கொண்டு பாடசாலைகளில் புத்தாக்கங்களை மலரச் செய்வதற்கு கல்வி அபிவிருத்திச் சபைகள் முன்வந்து உழைக்க வேண்டும்.

ஒரு காலத்தில் நாட் டின் கல்வித் துறையில் யாழ். பிரதேசத்தவர்களே முன்னிலை வகித்தனர். இந்நிலை இன்று புல மைப் பரிசில் தேர்வில் மாத்திரமே தக்க வைக்கப்பட்டிருக்கிறது. இவ் வாறு புலமைப்பரிசில் தேர்வினது பெறுபேறு உயர்நிலைக்கு பெற்றோரது ஆர்வமும் பங்களிப்பும் பிரதான காரணமாக விளங்கு கிறது. இத்தகைய பங்களிப்புகள் ஏனைய பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களது பெற்றோரால் வழங்கப்படும் போது எமது பிரதே சக் கல்வி உன்னத நிலையை அடையும்.



கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஒரு காலத்தில் எமது பிரதேசத்தில் மிகச் சிறப்பான பாடசாலையாக இருந்தது. அந்த நிலையை மீண்டும் உருவாக்க அனைவரும் ஒன்று பட்டுப்பாடுபட வேண்டும் என்றார்.

சிறப்புவிருந்தினர்களாகக் கலந்து கொண்ட பாடசாலையின் பழைய மாணவர் களான லயன் மருத்துவர் வி. தியாகராஜா, மக்கள் வங்கியின் கன்னாதிட்டி கிளை முகாமையாளர் ச.சிவபாலன் ஆகியோரும் உரையாற்றினர். ஓ

# முதியோர் , சிறுவர் ஆசிரியர் தினவிழா

அபிவிருத்தி மன்றத்தின் இணைக் கழகமான நல்லூர்க் கந்தன் சேமிப்புக்கழகம் நடத்தும் முதியோர் , சிறுவர்,ஆசிரியர் தின விழா இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் நாவலர் வீதியில் அமைந்துள்ள கைலாயப்பிள்ளையார் பாலர் பாடசாலையில் கழகத்தின் தலைவரும், சமூக அபிவிருத்தி மன்ற இணைப்பாளருமான திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதமவிருந்தினராக திருமதி ஆர்.றாகினி பங்குபற்றவுள்ளார்.அத்துடன் பாலர் பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீதேவி ஞானரட்ணம் கௌரவிக்கப்படவுள்ளதுடன், ஏனைய கடமையாற்றும் ஆசிரியர்களும் பாராட்டப்படவுள்ளனர்.தொடர்ந்து சிறுவர்களின் கலைநிகழ்ச்சிகளும் , அவர்களுக்கான பரிசில் வழங்கலும், முதியோர் கௌரவிப்பும் இடம்பெறவுள்ளது.ஓ

# தமிழவேள் கந்தசாமி காலமானார்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் செயலாளரும் ஈழத்து பூதந்தேவனார் தமிழ்நலன் கழகத்தின் ஸ்தாபகருமான தமிழவேள் இ.த. கந்தசாமி (வயது-90) நேற்று கொழும்பில் காலமானார்.

இவர் கடந்த மாதம் 11 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற சிலப்பதிகாரப் பெருவிழாவினை தனது தள்ளாத வயதிலும் சிறப்பாக நடத்தி முடித்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் இணுவிலைச் சொந்த இடமாகக் கொண்ட இவர், கொழும்பில் வசித்து வந்தார்.இவரின் இறுதிக் கிரியைகள் இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது. (ச)



வடக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலை பந்தாட்டப் போட்டிகளில் 15,19 வயதுப் பிரிவில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணிகள் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன. 15 வயதுப் பிரிவுத் தலைவி செல்வி சி.காயத்திரி, வெற்றிக் கிண்ணத்தை வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி வீ.ஆர்.வீ.ஒக்ஸ்வேல்ட்டிடம் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

# மாற்று ஆற்றலுள்ளோர் தினப் போட்டி முடிவுகள்

(உடுவில்)

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட உடுவில் கல்விக் கோட்ட மாற்று ஆற்றலுள்ளோர் தினப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்று வலய மட்டப் போட்டிக்குத் தெரிவானோர் விபரம் வருமாறு,

**பேச்சு** பிரிவு I

ஸ்ரீ.கீர்த்தனா - இணுவில் இந்துக் கல்லூரி, சி. கீர்த்திகா-சங்குவேலி அ.த.க. பாடசாலை, தே.ஜீவிதா-குப்பிளான் விக்னேஸ்வரா ம.வி., பு.பகின்சனா- ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி.

பிரிவு II

சி.பிரவீனா-இணுவில் மத்திய கல்லூரி, வா.சுபா-ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, அ. டியானா- ஏழாலை சைவ மகாஜனா வித்தி.

பிரிவுIII

க.வசீகரன் -இணுவில் மத்திய கல்லூரி, ம.தாட்சாயினி-இணுவில் இந்துக் கல்லூரி, அ.சாம்பவி-கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி.

பிரிவுIV

சி.சிந்து-இணுவில் மத்திய கல்லூரி, ப.பவித்திரா-இணுவில் இந்துக்கல்லூரி, ஸ்ரீ.ராகவர்த்தனி-இராமநாதன் கல்லூரி.

**கவிதை** பிரிவுI

சி.சாமந்தி-இராமநாதன் கல்லூரி, ஜெ.பிரசாந்தி-இணுவில் இந்துக் கல்லூரி, சி.லதாங்கி-ஏழாலை சைவ மகாஜன வித்தி.

பிரிவுII

சி.கம்சாயினி- இணுவில் இந்துக் கல்லூரி, கு.நிகேதினி- இராமநாதன் கல்லூரி, சி.கயப்பிரியா- இணுவில் மத்திய கல்லூரி.

பிரிவு III

யூ.சஜீவினி- இணுவில் மத்திய கல்லூரி, செ.யசோதா-உடுவில் முருகமூர்த்தி வித்தி., க.கனிஷ்டா-ஏழாலை சைவ மகாஜனவித்தி.

பிரிவுIV

த.கல்யாணி-இணுவில் மத்திய கல்லூரி, கோ.கஜந்தினி-ஸ்கந்தவரோதயா கல்லூரி, நா.விஜிதா-இணுவில் இந்துக் கல்லூரி.

**கட்டுரை** பிரிவுI

வி.பிரியங்கா-இணுவில் மத்திய கல்லூரி, க.டக்சிகா-இணுவில் இந்துக் கல்லூரி, ப. சுவிக்சனா-ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

பிரிவு II

ச.கஸ்தூரிகா-ஏழாலை சைவ மகாஜன வித்தி., த.அருட்செல்வி- இணுவில் மத்திய கல்லூரி, உ.தனுசன்- ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி.

பிரிவு III

செ.சுசிதா-ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி., பே.பிரசில்லா ராதிகா- ஏழாலை சைவ மகாஜன வித்தி., ந.தர்சிகா- உடுவில் முருகமூர்த்தி வித்தி.

பிரிவு IV

க.லோஜினி -இராமநாதன் கல்லூரி, த.தாரணி -இணுவில் மத்திய கல்லூரி, ச.சர்மிளா- இணுவில் இந்துக் கல்லூரி.

**இசை தனி** பிரிவு II

ந.நிஷா - இராமநாதன் கல்லூரி, வி.கல்யாணி-இணுவில் மத்திய கல்லூரி, பா. சொர்ணா-குப்பிளான் விக்னேஸ்வரா ம.வி.

பிரிவு III

போட்டியின்றி

லோ.சிந்துஜா -இணுவில் மத்திய கல்லூரி,ஜெ.தேவரூபி- இராமநாதன் கல்லூரி.

பிரிவு IV

அ.அமிர்தசிந்துஜன்-இணுவில் மத்திய கல்லூரி, து.துஷ்யந்தினி- இராமநாதன் கல்லூரி,வி.அருள்சாலினி-இணுவில் இந்துக் கல்லூரி.

**குழு இசை** பிரிவு II

இணுவில் மத்திய கல்லூரி, இராமநாதன் கல்லூரி, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தி.

பிரிவு III

போட்டியின்றி

இணுவில் மத்திய கல்லூரி, இராமநாதன் கல்லூரி.

**தனி நடனம்**

வி.தாட்சாயணி- இராமநாதன் கல்லூரி

**குழு நடனம்** பிரிவு II

கந்தரோடை த.க.வித்தி ,ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தி.

பிரிவு III

இராமநாதன் கல்லூரி,

திறந்த போட்டி -**நாடகம்**

போட்டியின்றி

ஏழாலை சைவ மகாஜனா வித்தி., இராமநாதன் கல்லூரி.

திறந்த போட்டி -**நாட்டிய நாடகம்**

இணுவில் மத்திய கல்லூரி

திறந்தபோட்டி-**வில்லிசை**

இணுவில் இந்துக் கல்லூரி. ஓ

# முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெயர்ந்தோர்

# இரண்டு இலட்சத்து 40 ஆயிரமாக அதிகரிப்பு

## முல்லைத்தீவு அரச அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெயர்ந்து வந்த அறுபதாயிரத்து 656 குடும்பங்களைச் சோந்த இரண்டு இலட்சத்து நாற்பதாயிரத்து 323 பேர் தங்கி இருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் கடந்த பதினான்காம் திகதி செவ்வாய்க்கிழமை பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பித்த புதிய புள்ளிவிபர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னி நிலைமை குறித்து ஆராய ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பசில் ராஜபக்ஷ தலைமையில் பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த புள்ளி விபர அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா அரசாங்க அதிபர்களும் உயர் அதிகாரிகளும் இக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு அரசாங்க அதிபர்கள் வன்னி நிலை குறித்த கூட்டத்தில் விளக்கமளித்தனர்.

உணவு மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள், பற்றாக்குறைகள் குறித்து அவர்கள் கூட்டத்தில் எடுத்துக் கூறினார். போக்குவரத்து செய்வதில் உள்ள பாதை பிரச்சினைகள் குறித்தும் தெரிவித்தனர்.

நெடுங்கேணி பாதை மிகவும் சீர்கெட்டிருப்பதாக எடுத்துக் கூறப்பட்டது.

இதனை அடுத்து நெடுங்கேணி பாதையைப் புனரமைக்க உடனடியாக பதினைந்து மில்லியன் ரூபாவை வழங்குமாறு பசில் ராஜபக்ஷ தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சின் செயலாளர் குமாரசிறிக்கு உத்தரவிட்டார்.

கிளிநொச்சி மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு ஒரு மாதத்திதற்கு தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிக்கு அவர் உத்தரவு பிறப்பித்தார். ஓ

# 600 கிலோகிராம் வெடிபொருள்களுடன் மலையகத்தில் புலிகள் ஊடுருவல்!

(கொழும்பு)

சுமார் 600 கிலோக்கிராம் எடையுடைய வெடிபொருள்களுடன் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் மலையகப் பகுதிகளில் ஊடுருவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வன்னியிலிருந்து மலையகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட பொருள்களில் ஒரு தொகுதி மட்டுமே மீட்கப்பட்டுள்ளதாகப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதுவரையில் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் பயிற்சி பெற்ற 74 பேர் மலையகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். முடி திருத்துநர்கள், கூலித் தொழிலாளர்கள், சாரதிகள், ஹோட்டல் தொழிலாளர்கள் எனப் பல்வேறு தொழில்களில் குறித்த உறுப்பினர்கள் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கம்பளை, மாத்தளை, நாவலப்பிட்டி, பதுளை மற்றும் ஹற்றன் போன்ற பகுதிகளில் குறித்த விடுதலைப்புலி உறுப்பினர்கள் செயற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

# இன்று ஒரு தகவல்

## வேதாந்த விளக்கம்

ஒரு பெரியவர் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார். அவரிடம் ஒரு பை இருந்தது. அதில் பணம் நிறைய வைத்திருந்தார்.

அவர் களைப்பினால் கண்ணை மூடும் நேரம் பார்த்து, ஒருவன் மெதுவாக அவரருகே வந்தான். வந்து நைசாக அந்தக்கைப்பையை பிடுங்கிக் கொண்டு ஓடப் பார்த்தான். அதற்குள் பக்கத்திலிருந்தவர்கள் சத்தம் போட பெரியவர் முழித்து விட்டார்.

உடனே எழும்பி அவன் மீது பாய்ந்து பையை மீட்டுக் கொண்டு வந்தார். அதன் பின்னர் தான் அவருக்கு நிம்மதி!

இது தான் இயல்பு!

இதை விட்டு விட்டு ,"பணப்பையைத் தானே எடுத்துக் கொண்டு போகிறான்... போனால் போகட்டும்! அவனும் மனுஷன் தானே!" என்று வேதாந்தம் பேச மாட்டார்.

அப்படி பேசினால் அவர் வேதாந்தத்தை சரியாக புரிந்து கொள்ளவில்லை என்று அர்த்தம்.

இதை விளக்க ஸ்ரீராம கிருஷ்ணர் ஒரு கதை சொல்லியிருக்கிறார்.

ஒரு காட்டில் ஒரு சாது இருந்தாராம். அவருக்குப் பல சீடர்கள் .ஒரு நாள் அவர்களையெல்லாம் கூப்பிட்டு வைத்து உபதேசம் பண்ணினார்.

"இந்த உலகத்தில் இருப்பது எல்லாமே கடவுளுடைய வடிவங்கள், அதை நீங்கள் எல்லோரும் நன்றாக புரிந்து கொள்ளவேண்டும் ! அதைப் புரிந்து கொண்டு எல்லோரையும் வணங்கவேண்டும்!" என்றார்.

எல்லா சீடர்களும் அக்கறையாக அதை மனதில் வாங்கிக் கொண்டார்கள்.ஒரு நாள் ஒரு சீடன் விறகு பொறுக்குவதற்காக காட்டுக்குப் போனான்.

அப்பொழுது சிலர் "மதம் பிடித்த யானை ஒன்று வருகிறது. எல்லோரும் ஓடிப் போய்விடுங்கள்" என்று கத்திக் கொண்டு ஓடி ஒளித்தார்கள்.

சில பேர் மரத்தில் ஏறிக் கொண்டார்கள்.

ஆனால் அந்த சீடன் மட்டும் நகரவேயில்லை!

"நான் எதற்காக ஓட வேண்டும் ?நானும் கடவுள் இந்த யானையும் கடவுள்!" என்று நினைத்துக் கொண்டு அசையாமல் அந்த இடத்திலேயே நின்று விட்டான்.

யானை கிட்டத்தில் வந்ததும் கையிரண்டையும் மேலே தூக்கி துதிப்பாடல் ஒன்றை பாட ஆரம்பித்தான்.

யானைப் பாகனும் " ஓடிப் போய் விடு" என்று கத்தினான். அந்த சீடனுக்கு அதெல்லாம் பெரிதாகப் படவேயில்லை! எதையோ முணுமுணுத்துக்கொண்டே நின்றான்.

இவன் கையிரண்டையும் மேலேதூக்கிக்கொண்டு நின்றது. யானைக்கு வசதியாகப் போய்விட்டது. அப்பிடியே வேகமாக துதிக்கையால் சுருட்டி வளைத்து ஒரு பக்கமாக எறிந்து விட்டுப்போய் விட்டது.

"அம்மாடி!" என்று கத்திக் கொண்டே போய் விழுந்தான்.ஆச்சிரமத்தில் இருந்தவர்கள் இதைக் கேள்விப் பட்டு ஓடி வந்து ஆச்சிரமத்துக்கு தூக்கிக் கொண்டு போனார் கள்.

இவன் மெதுவாக கண்ணைத் திறந்து பார்த்தான் அப்பொழுதுசீடனில்ஒருவன் "யானை வந்தது தான் உனக்குத் தெரியுமே! நீ ஏன் அங்கிருந்து ஓடவில்லை?" என்றான்.

அதற்கு இவன் ," உலகத்தில் உள்ள எல்லாமே கடவுளின் வடிவங்கள் என்று தானே நம் குருநாதர் நமக்குச் சொல்லிக்கொடுத்தார். அது தான் யானை யைப் பார்த்ததும் கடவுள் தான்வருகிறார் என்று நினைத்து விட்டேன்" என்றான்.

இதைக் கேட்ட குருநாதர்,

"அது சரி ... நீயும் கடவுள் தான்! யானையும் கடவுள் தான்!ஆனால் அந்த யானை மீது உட்கார்ந்திருந்த பாகனும் கடவுள் தானே! அந்த கடவுள் ஓடிப்போ என்று எச்சிரிக்கை கொடுத்ததே! அந்த வார்த்தையில் உனக்கு ஏன் நம்பிக்கை வரவில்லை?" என்று கேட்டார்.

அப்பொழுது தான் சீடனுக்கு தான் செய்த தவறு விளங்கியது. வேதாந்தத்தை சரியாக புரிந்து கொள்ளாத தால் வந்த விளைவுதான் இது!

வேதாந்தி ஒருவர் ரயிலில் பிரயாணம் செய்தார். அவர் கையில் ஒரு சூட்கேஸ் இருந்தது.

அந்த சமயம் பார்த்து ஒரு திருடன் அதை பறித்துக் கொண்டு ஓடினான். எல்லோரும் சத்தம் போட்டார்கள். இவர் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ள வேயி ல்லை "போனால் போகட்டும்விடுங்கள்!பாவம்பிழைத்துக்கொள்ளட்டும்!" என்றார்.

இவர் தான் உண்மையான வேதாந்தி என்று நினைத்து எல்லோரும் காலில்விழுந்து வணங்கினார்கள். ஆனால் அவர்கள் அத்தனை பேருக்கும்ஒரு உண் மை தெரியாது! அதாவது அந்த சூட்கேஸில்இருந்தது முழுக்க கள்ள நோட்டு என்று!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணையை வேறு நீதி மன்றங்களுக்கு மாற்ற வேண்டாமென கோரிக்கை

(கொழும்பு)

கடந்த மூன்றுவருடங்களுக்கு மேலாக முடங்கிப் போயுள்ள ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகளை யாழ் மேல் நீதிமன்றிலிருந்து அநுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு மாற்றவதற்கு செய்யப்பட்டுள்ள நடவடிக்கைகள் காணாமல் போனோரது பாதுகாவலர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. இவ்வழக்கு விசாரணைகள்,அநுராதபுரம் மேல் நீதிமன்றிற்கு மாற்றப்பட்டமையால் அவைமுடங்கிப்போகலாமெனவும் அவர்கள் அச்சங்கொண்டுள்ளனனர். தற்போதையசூழலில் சாட்சிகளெவரும் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு விசாரரணகளுக்கு சென்று வருவது சாத்தியமில்லையெனவும் அவர்கள் தரப்பில் கூறப்படுகின்றன.

1996மற்றும்1997ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டு காணமல் போனஇளைஞர் யுவதிகள் தொடர்பில் அவர்களது குடும்பத்தவர்களால் ஆட்கொணர்வு மனுக்கள், யாழ்.மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அவ்வாட்கொணர்வு மனுக்கள் தொடர்பில் ஆரம்பக் கட்ட விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஏனைய நீதிவான் நீதிமன்றங்களுக்கு மேல் நீதி மன்று உத்தரவு பிறப்பித்திருந்தது.

இவ் வாட் கொணர்வுமனுக்கள் மீதான ஆரம்பக் கட்ட விசாரணைகளை மேற் கொண்டிருந்த சாவகச்சேரி நீதிமன்று, இக் காணாமல் போதல் சம்பவங்களுடன் படையினர் தொடர்புபட்டிருப்பது நிரூபிக், கப்பட்டிரு ப்பதாகக் கூறி அறிக்கை சமர்ப்பித்திருந்து.

ஏனைய நீதிமன்ற ங்களில் இவ்வாட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகள் தொடர்ந்தும் நிலுவையிலேயே உள்ளன.

இவ்வாட்கொணர்வு மனுக்களில் எதிரிகளாக குறிப்பிடப்பட்டுள்ள படையினரில் பெரும்பாலானோர் பதவி உயர்வு பெற்று தற்போது அதிகாரிகள் தரத்தில் உள்ளதாக கூறப்படுகின்றது. இந்நிலையில் பாதுகாப்பு காரணங்களை முன் வைத்து யாழ்ப்பாணம் நீதிமன்றங்களில் ஆஜராக பின்னடித்து வரும் இவர்கள், வழக்கு விசாரணைகளை தென்னிலங்கைக்கு மாற்றுமாறு மேன் முறையீடு செய்துமிருந்தனர்.

இதையடுத்தே மேன்முறையீடு நீதிமன்று, இவ்வாட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகளை அநு ராபுரம் மேல் நீதிமன்றிற்கு மாற்ற உத்தரவிட்டுள்ளது.எனினும் இவ் வழக்குகள்அநுராதபுரம் மேல் நீதி மன்றிற்கு மாற்றப்படுமானால் , சாட்சிகள் அங்கு சென்று வருவது கேள்விக் குறியே என கூறப்படுகிறது.

யாழ் குடா நாட்டிலிருந்து வெளியே செல்வதற்கென பாஸ் நடைமுறை தற்போது அமுல்படுத்தப் பட்டுவருகின்றது. அவ்வாறு பாஸ் அனுமதி பெற்று சாட்சிகள் அநுராதபுரம் செல்வது நடக்கக் கூடிய தொன்றல்ல என பாதுகாவலர்கள் தரப்பில் கூறப்படுகின்றது. ஓ

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் பாம்புக்கடி மருந்துக்கு தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பாம்புக்கடி அதிகரித்துவரும் நிலையில் பாம்புக்கடிக்கு சிகிச்சை அளிப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் அன்டி சினேக் வெனம் என்ற ஊசி மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கிளிநொச்சி வைத்திய சாலை வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் நாளாந்தம் மூன்று, நான்கு பேர் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வருவதாகவும் பாம்புக்கடியினால் இதுவரை இரண்டு பேர் மரணமடைந்திருப்பதாகவும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

டாக்டர் சத்தியமூர்த்தி மேலும் தெரிவித்தாவது,

பாம்புக் கடிக்கானஅன்டிசினேக் வெனம் ஊசி மருந்து தீர்ந்துவிட்டது.இவ்ஊசி மருந்துகள் உட்பட மருந்து வகைகள்அனுப்பி வைக்கப் பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இன்னும் மருந்துகள் வந்தடையவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில் மழை பெய்ய ஆரம்பித்துள்ளது. இடம் பெயர்ந்தவர்களுக்கு போதிய கழிவறை வசதிகள் இல்லாததால் தொற்றுநோய் அபாயம் நிலவக் கூடிய நிலமை உள்ளது. வயிற்றோட்டம் நோய் இப்போது பரவியிருக்கிறது. மலேரியாக் காய்ச்சல் பரவலாம்.

கிளிநொச்சிவைத்தியசாலைக்கு மாதாதம் பதினைந்தாயிரம் லீற்றர் டீசல் தேவைப்படுகிறது. ஆனால் ஆறாயிரம் லீற்றர் டீசலே மாதாந்தம் வழங்கப்படுகிறது. அதுவும் கடந்த மாதத்திற்கான டீசல்வழங்கப் படவில்லை.

கிளிநொச்சி வைத்தியசாலையில் சில பிரிவுகள் தர்மபுரம், உருத்திரபுரம், விஸ்வமடு ஆகிய இடங்களில் இயங்கிவருகின்றன. கிளிநொச்சி வைத்தியசாலையில் முக்கிய பிரிவுகள் இயங்கி வருகின்றன. ஓ

## இராசி பலன்

20.10.2008
(ஐப்பசி 4, திங்கட்கிழமை)
திருவாதிரை முன்னிரவு 9.49மணிவரை
ஷஷ்டி பிற்பகல் 1.22 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02மணிவரை
சுபநேரம்12.02 -1.32மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பிரயாண நன்மை, கூட்டு முயற்சி, சகோதரர் உதவி, தன லாபம். |
| இடபம் | வீவாதம் , மாதர்நட்பு, மனச் சோர்வு,முயற்சி தாமதம். |
| மிதுனம் | சிந்தனை மிகுதி , சத்துரு ஜெயம், உடல் நலம், புதிய முயற்சி. |
| கடகம் | அலைச்சல், ரோகநிலை, பேராசை,தனவிரயம். |
| சிங்கம் | பெருமையடைதல், இஷ்ட சித்தி,பொருள் சேர்க்கை, சகோதரர்உதவி. |
| கன்னி | நல்லசெய்தி,புதியதிருப்பம்,அதிகாரம்,தொழில்நன்மை. |
| துலாம் | கட்டுப்படுத்தல், தந்தை வழிஉறவு, பிரயாணம், வீண் பயம். |
| விருச்சிகம் | எதிர்பாராத பிரச்சினை,காரிய தடங்கல்,பணக்குறைவு, மரியாதைக்குறைவு. |
| தனுசு | சௌக்கிய விருத்தி, களஸ்திர நன்மை, செல்வாக்கு, காரிய சித்தி. |
| மகரம் | மனமகிழ்ச்சி, சத்துரு ஜெயம், போசனசுகம்,நோய்குணமடைதல். |
| கும்பம் | கௌரவக்குறைவு, செய் தொழில் விருத்தி, நோய் குணமடைதல். |
| மீனம் | உடல் நலகக்குறைவு, மனப பயம், முயற்சி தாமதம், பண விரயம். |

வளவன்

# திறந்த பல்கலைக்கழகத்தின் பொது பட்டமளிப்பு விழா

(கொழும்பு)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் 2008கல்வியாண்டுக்கான பொதுபட்டமளிப்பு விழா நவம்பர்மாதம் 19ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டுமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 19ஆம் திகதி பட்டமளிப்புவிழாவின் பின்னர் இடம் பெற்ற இறுதிப் பிரீட்சைகளில் சித்தியடைந்த சகல பட்டப்படிப்பு, பட்டமேற்கல்வி , பட்டமேல் டிப்ளோமா கற்கை பரீட்சார்த் திகளுக்கான பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

பட்டங்கள் வழங்குவதற்கான வேண்டுகோள் படிவங்கள் சகல பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இப் படிவங்கள் இம் மாதம் 29ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் காலந்தாழ்த்தி அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் இலங்கை பல்கலைக்கழக பதிவாளர்அறிவித்துள்ளார். ஓ

# பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

திறந்தபல்கலைக்கழகத்தில் 2009/2010கல்வியாண்டில் பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளல் தொடர்பாக முன்னர் விளம்பரப்படுத்தியதன் பிரகாரம் விண்ணப்பப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியாத சகல தகுதியுள்ள பரீட்சார்த்திகளுக்கும் இம் மாதம் 29ஆம் திகதி முதல் நவம்பர் 7ஆம் திகதி வரை மீண்டும் விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட உள்ளதாக நாவல இலங்கைப் பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். ஓ

## முதியோர் தின விழா

வடமராமட்சி வடக்கு பிரதேச செயலக முதியோர் தின விழா இன்று திங்கட்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெற இருக்கிறது. பிரதம விருந்தினராக கைதடி அரச முதியோர் இல்ல அத்தியட்சகர் என்.இராஜலிங்கம், சிறப்பு விருந்தினராக சாந்திகம் நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ்.வீ.சங்கரப்பிள்ளை, தியாகி அறக்கொடை நிலையப் பணிப்பாளர் கி.கமலநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

வரவேற்புரை யை உதவிப் பிரதேச செயலர் திருமதி உஷா சுபலிங்கமும் நன்றியுரையை சமூகசேவை உத்தியோகத்தர் எஸ். சுரேந்திராவும் நிகழ்த்தவுள்ளார்கள்.

அத்துடன் 50 முதியோர்களுக்கான அன்பளிப்புப் பொருட்களை சாந்திகம் நிறுவனமும் 10 ஆதரவற்ற முதியோர்களுக்கான மாதாந்த உதவித் திட்டத்தை தியாகி அறக்கொடை நிலையமும் வழங்கவுள்ளனர். (ஓ)

## கணனி வகுப்பு ஆரம்ப விழா

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடாத்தும் சண்டிலிப்பாய் பிரிவுக்கான கணனி வகுப்பு ஆரம்ப விழா நாளை செவ்வாய்க்கிழமை பகல்10.30மணிக்கு ஆனைக் கோட்டை, 3ஆம் கட்டை இலங்கை செஞ்சிலுவைச் சங்க சண்டிலிப்பாய்ப் பிரிவு செயலகத்தில் இ.செ.ச. சண்டிலிப்பாய் பிரிவு உபதலைவர் சி.நாகையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் திருமதி.ரூபினி வரதலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக ஜப்பான் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி செல்வி. றொசிக்கோ கிற்றகரா, யாழ். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் குழு வதிவிடப் பிரதிநிதி செல்வி. அல்மோனா எலினா, இளைஞர் சேவைப் பணிப்பாளர் வாமசூரியா பாட்டபண்டிஷ் மகேந்திரா, இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை தலைவர் வி.கே.கணேசலிங்கம், கிராம சேவையாளர் (ஜே/133) வி.சுந்திரராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ)

## சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம்

உறுப்புரை - 20

எவருக்கும் சமாதானமான முறையில் ஒன்று கூடுவதற்கும் , இணைவதற்குமான சுதந்திரத்திற்கு உரிமையுண்டு.

# வலிகாமம் கல்வி வலய விளையாட்டுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் 31ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

◆ இதில் தாச்சிப் போட்டி 21 ஆம் 22 ஆம்(செவ்வாய், புதன்) திகதிகளில் யா/ மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை மைதானத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

◆ இப் போட்டிகள் யாவும் விலக்கல் முறையில் நடைபெறும்.

◆ இதில் ஒரு கோட்டத்தில் இருந்து முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகள் பங்குபற்றலாம்.

◆ அணிப் பட்டியலுடன் பிறந்ததிகதி, பிறப்பு அத்தாட்சிப் பத்திர உண்மைப் பிரதி, அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட படம் ஆகியன சமர்ப்பிக்கப்படவேண்டும்.

◆ அத்துடன் போட்டியாளர்கள் போட்டிக்கான சீருடையுடன் 01-06 வரையான இலக்கம் அணிந்துஇருத்தல்வேண்டும்.

◆ மெய்வல்லுநர் போட்டி 23,24 ஆம் (வியாழன், வெள்ளி) திகதிகளில் உடுவில் மகளிர் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

◆ தாச்சிப்போட்டி விதி 3இல் உள்ளபடி இருத்தல் வேண்டும்.

◆ போட்டிக்குரிய சீருடையில் இலக்கம் (5"4") பெரிதாக எழுதப்பட்டிருத்தலுடன் பாதுகாப்பு ஊசியினால் நான்கு மூலைகளிலும் குத்தி இருத்தல் வேண்டும்.

◆ கோட்ட மட்டத்தில் முதல் இரண்டு இடங்களைப் பெற்றவர்கள் இப் போட்டிகளில் பங்குபற்றலாம்.

◆ உதைபந்தாட்ட போட்டிகள் 29,30,31 ஆம் திகதிகளில் (புதன்,வியாழன்,வெள்ளி) நடைபெறவுள்ளது. இதில் 18 வயதின் கீழ் 16 வயதின் கீழ்,13 வயதின் கீழ் என 3 பிரிவுகளில் நடத்தப்படும்.

◆ இதற்கு கோட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகள் பங்குபற்றலாம்.

◆ போட்டிகள் உதைபந்தாட்ட விதிகளுக்கும், சென்ற வருடத்தின் வலய மட்டப் போட்டி விதிகளுக்கு அமைவதாகவும் நடைபெறும். உதைபந்தாட்ட சுற்று 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு இராமநாதன் கல்லூரியின் விசேட கல்விப்பிரிவினர் மண்டபத்தில் (பழைய வலிகாம வலயம்) நடைபெறும்.

முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிப் பொறுப்பாசிரியர்கள் இதன்போது சமூகம் தருமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.(ஓ)




## உள்ளூராட்சி வார மென்பந்து துடுப்பாட்டத்தில்

# காரை. பிரதேச செயலக அணி சம்பியன்

(காரைநகர்)

காரை நகர் பிரதேச சபை உள்ளூராட்சி வார மென்பந்து கிரிக்கெற் சுற்றுப்போட்டியில் காரை நகர் பிரதேச செயலக அணி சம்பியனானது.

காரை நகர் பிரதேச சபையினர் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு காரைநகர் பிரதேச திணைக்களங்களுக்கிடையே கிரிக்கெற் சுற்றுப்போட்டி மற்றும் கயிறு இழுத்தல் போட்டி என்பவற்றினை கலாநிதி தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தில் நடத்தியது.

6 பந்து பரிமாற்றங்களைக் கொண்டதும் 6 வீரர்களைக் கொண்டதுமான கிரிக்கெற் சுற்றுப்போட்டியில் காரைநகர் பிரதேச திணைக்களங்களான காரைநகர் தபால் கந்தோர், இலங்கை போக்குவரத்துச் சபை, பிரதேச சபை, வைத்தியசாலை, பிரதேச செயலகம் போன்ற 5 அணிகள் மோதின.

இதில் இறுதிப்போட்டிக்கு காரைநகர் போக்குவரத்துச்சபை அணியும், காரைநகர் பிரதேச செயலக அணியும் தெரிவாகின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற போக்குவரத்துச்சபை அணித் தலைவர் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார். இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய காரைநகர் பிரதேச செயலக அணி 5 பந்து பரிமாற்ற நிறைவில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 43 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் சுதாகரன் 15ஓட்டங்களையும், த. ஜெயசீலன் 9 ஓட்டங்களையும், கஜன் 6 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பிரதீபன் 2விக்கெற்றுக்களையும், சிவகரன் 1விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 6 ஓவர்களில் 44 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் போக்குவரத்துச்சபை அணி களமிறங்கியதும் பிரதேச செயலக அணித்தலைவர் ஜெயசீலனின் அபார பந்துவீச்சினால் போக்குவரத்துச் சபை அணியினர் ஹற்றிக் முறையில் அடுத்தடுத்து மூன்று விக்கெற்றுக்களை இழக்க 4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 25 ஓட்டங்களையே பெற்றது.


இதன்மூலம் காரைநகர் பிரதேச செயலக அணி 19 ஓட்டங்களால் வெற்றியீட்டி சம்பியானது.

பந்துவீச்சில் அணித்தலைவர் இ.த.ஜெய சீலன் 3 விக்கெற்றுக்களையும் அசோக்குமார், லம்போதரன் ஆகியோர் தலா ஒரு விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

இதேபோல் கயிறு இழுத்தல் போட்டியிலும் மேற்படி 5 அணிகளுடன் மேலதிகமாக காரைநகர் பலநோக்கு கூட்டுறவு சங்க அணியும் இணைந்து போட்டியில் பங்குபற்றின.

மேற்படி 6 அணிகளும் விலகல் முறையில் போட்டியில் பங்கு பற்றி காரைநகர் பலநோக்குக்கூட்டுறவுச்சங்க அணியும் காரைநகர் போக்குவரத்துச்சபை அணியும் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்று முன்னேறின.

இதில் காரைநகர் போக்குவரத்துச்சபை அணியினர் கயிறு இழுத்து முதலாவது இடத்தினையும் இறுதிப்போட்டியில் பங்குபற்றிய காரைநகர் பலநோக்குக்கூட்டுறவுச் சங்க அணி இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டது. மேற்படி போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் உள்ளூராட்சி வார விழாவின் போது வழங்கப்படவுள்ளதாக பிரதேச் சபை விளையாட்டுக் குழு தெரிவித்துள்ளது. (5-246)



இணுவில் திருவருள்மிகு சிவகாமி அம்மன் கோவிலில் நடைபெற்ற நவசக்தி பூஜையும் அம்பாள் தங்கரதத்தில் பவனி வரும் காட்சியையும் படங்களில் காணலாம்.

## பொது உளச்சார்பை விருத்தி செய்யும் போட்டிகள்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையின் கோண்டாவில் பொது நூலகம் மாணவர்களின் பொது உளச் சார்பை விருத்தி செய்வதற்கு பொது அறிவுப் போட்டி மற்றும் கவிதை, கட்டுரை போட்டிகளை நடாத்தவுள்ளது.

பங்குபற்ற விரும்பும் மாணவர்கள், தமது பெயர், கற்கும் பாடசாலை, பிறந்த திகதி என்பவற்றை கொண்ட விபரப் பட்டியலை கோண்டாவில் பொது நூலகத்தில் ஒப்படைக்கலாம் எனவும் போட்டிகள் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 10 மணிக்கு கோண்டாவில் பொது நூலகத்தில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-36)

## பட்டமேற்கல்வி டிப்ளோமா விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழக பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்சித் திட்டம் 2009/2010 ஆம் கல்வியாண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களை இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் இன்று தொடக்கம் 650 ரூபாவை செலுத்தி பெற முடியும் என இணைப்பாளர் அறிவித்துள்ளார். விண்ணப்பப் படிவங்களைப் பெற வரும்போது,

தேசிய அடையாள அட்டை, முதல் நியமனக்கடித (ஆசிரியர்) உறுதிப்படுத்திய புகைப்படப்பிரதி, கற்பித்தலை உறுதிப்படுத்தி ஆசிரியர் கற்பிக்கும் பாடசாலை அதிபரால்/ திணைக்களத் தலைவரால் வழங்கப்பட்ட கடிதம் போன்ற விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

31.12.2005க்கு முன் ஆசிரிய நியமனம் பெற்றுக்கொள்ளாதவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்களாவார்கள். (ச)

## தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்ட செயற்பாடுகள்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொதுநூல் நிலையத்தினரால் நடைமுறைப் படத்தப்படும் செயல் திட்டங்களில் இன்று திங்கட்கிழமை வாசிப்பில் சிறுவர்களை ஊக்குவிக்கும் படக்காட்சியும் 22ஆம்திகதி புதன் கிழமை பாடசாலை மாணவர்களுக்கான கதைகூறல், வாசிப்பு, பேச்சு, கட்டுரை, கவிதை, பாவோதல் போட்டிகளும், 23ஆம் திகதி வியாழக்கிழமை வாசகர்கள், மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டிகளும் 30 ஆம்திகதி வியாழக்கிழமை முன்பள்ளிச் சிறார்களுக்கிடையிலான கொன்றைவேந்தன் மனனப் போட்டியும் இடம்பெறவுள்ளதுடன் சஞ்சிகை ஆக்கம், பழைய, புதிய புத்தகங்கள் நூலகத்திற்காக அன்பளிப்பாகப் பெறல் போன்ற செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளதெனவும் நூலகர் இ.தர்மலிங்கம் தெரிவித்தார். (ஓ-29)

## நாட்டிற்காக ஜெபிக்கும் முழு இரவு ஜெபம்

மானிப்பாயில் அமைந்துள்ள அசெம்பிளி ஒவ்கோட் சபைகள் இணைந்து நடத்தும் நாட்டின் நன்மை வேண்டி ஜெபிக்கும் முழு இரவு ஜெபம் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6மணி முதல் சனிக் கிழமை காலை 6 மணிவரை மானிப்பாய் சர்வதேச பாடசாலையில் நடைபெறவுள்ளது. (ஓ)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட கொழும்புத் துறை குருநகர் பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி (ARV) நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை உயர் நீதிமன்றம் முன்பாகவும், பிற்பகல் 2மணி முதல் 3.30 மணிவரை கியூமெடிக்கா பாலர் பாடசாலையிலும் வைத்து ஏற்றப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு இத் தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் கேட்டுக்கொண்டுள்ளார். (ஓ)

# நோர்த்முதல் கோபல்லவா வரை (130)



## சேர் யேம்ஸ் பீரிஸ் அவர்கள்

சேர்.அருணாசலம் அவர்களைப் போல வே சேர்.ஜேம்ஸ் பீரிஸ் அவர்களும் இலங் கையின் சுதந்திரத்துக்காக அரும்பாடு பட்டார். யேம்ஸ் பீரிஸ் கேம்பிரிஜ் சர்வ கலாசாலையில் கல்வி கற்ற காலத்தில், அதற்கு முன்னர் ஆசிய மக்கள் எவரும் வகிக்காத மகத்துவமான கேம்பிரிஜ் மாணவர் சங்கத் தில் தலைமைப் பதவியை வகித்து ஆசியாக் கண்டத்துக்கே அரும் பெரும் சிறப்பைத் தேடிக்கொண்டார்.

அவர் கேம்பிரிஜ் சர்வகலாசாலையில் விற்பத்திமானாகி, மன தத்துவ சரித்திரத் திலும் சட்டத்துறையிலும் முதலாம் பிரிவில் கீர்த்தியுடன் சித்திபெற்று இலங்கைக்கு மீண்டார். யேம்ஸ் பீரிஸ் இலங்கைக்கு மீண்டதும் உத்தியோகங்களில் ஈடுபடாது தேச சேவையில் உழைப்பாராயினார். அவர் இலங்கை பூரண சுதந்திரம் பெறல் வேண் டும் என்று கேட்டதில்லை. அவர் பிரித்தானிய பேரரசுவாதி. பிரித்தானியப் பேரரசில் இலங்கை சுயவாட்சி பெற்றே அல்லது பொறுப்பாட்சி பெற்றே இருந்தாற் போதுமா னது எனக் கிளர்ச்சி செய்தார். டொனமூர்த் திருத்த சபையினர் முன் வாக்குமூலம் அளித்த போதும் அவர் இலங்கை சுயவாட்சி நடத்து வதற்குப் பக்குவமடையவில்லை என்றே கூறி யுள்ளார்.

இலங்கையின் சுதந்திரக் கிளர்ச்சியின் போது பீரிஸ் தமது சகபாடிகளைச் சுதந்திரப் பாதையில் வழிநடத்திச் சென்று மோசேஸ் ஆவர் என பண்டாரநாயக்க உவமை கூறியுள்ளார். வழிநடத்தும் தலைமைக் குணம் பீரிஸ் அவர்களிடம் பிறப்பிலேயே அமைந்ததென்பர். முன்னொரு காலத்தில்

### மீன் பார்வை

சீரும் சிறப்பும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்த பீரிஸ் குடும்பத்திலே 1856 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் திகதி பீரிஸ் பிறந்தார். பீரிஸ் பிறந்த காலத்தின் முன் பின்னாக அவருடைய குடும்பம் வறுமைப்பட்டதால், அவர் பாடசாலைக்கு நடந்தே போனார். அவர் றோயல் கல்லூரியிலே கல்வி கற்ற காலத் திலே பேராசிரியர் றொட் என்பாரின் மதிப்புக் குரிய மாணவராயிருந்தார் என்பர். விவேகி யாய பீரிஸ் கவனமாகப் படித்தாராகையால் இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிஜ் சர்வகலா சாலையில் கல்வி கற்க உதவும் உபகாரச் சம்பளப் பரிசையும் அவர் பெற்றார்.


வெற்றியில் மனக்களிப்பும் தோல்வியில் மனக்கொதிப்பும் இல்லாத பீரிஸ் 1882 ஆம் ஆண்டில் சீமை அப்புக்காத்தாகச் சித்தியெய்தி இலங்கைக்கு மீண்ட காலத்தில் அவரைப் பெரிய இடத்துச் சம்பந்தம் ஒன்று காத்திருந்தது. இலட்சாதிபதியான பெண் ணை விவாகஞ் செய்த பீரிஸ் தோட்டத் துறை யில் ஈடுபட்டுக் கொண்டே சட்டத் துறையை யும் பார்க்க எண்ணினார். அவர் சீமையில் இருந்த காலத்தில் சட்டத்துறையின் அதி கௌரவமான மக்மோகன் மாணவன் என்ற தகுதியும் கிடைத்தது.

அவர் அரசியல் வாழ்வில் ஈடுபடுவதற்கு முன் கொழும்பு மாநகரசபையின் கொம் பனிப் பிட்டித் தொகுதியின் அங்கத்தவராய் 1898 ஆம் ஆண்டில் தெரியப்பட்டார். அவரு டைய பரோபகாரப் போக்கையும் செயற்திற னையும் சேவை மனப்பான்மையும் ஆற்ற லையும் அறிவையும் அயரா உழைப்பை யுங் கண்ட சிங்களவர் அவரைச் சுற்றி வட்ட மிட்டனர். தமது முன்னேற்றத்துக்கு ஏற்ற வழி காட்டி அவரே என அவர்கள் கண்டனர். சட்டசபையில் அவரை நியமிப்பதற்கு ஆள்பதி கூட நினைக்காத காலம்அது.


திரு H.J.C பெரேரா குடியேற்ற நாட்டு மந்திரியாரிடம் அரசியற்றிருத்தங் கோரிப் போன காலத்தில் குடியேற்ற மந்திரியாரின் உதவி மந்திரியாயிருந்த சீலி என்பார் யேம்ஸ் பீரிசைத் தமது அபிப்பிராயத் தையும் அங்கே வந்து கூறுமாறு 1909 ஆம்ஆண்டில் அழைத்திருந்தார். அப்பிரதி யாளர் குழுவில் திரு E.W.பெரேரா அவர் களும் போனார்கள். அவர்கள் குடியேற்ற மந்திரியாரிடம் திருத்தங் கோரிச் சமர்ப்பித்த திட்டம் பீரிஸ் மனோவன்மையாலேயே உருவானதென்றும், படித்த இலங்கையர்

**க.சி.குலரத்தினம்**

பிரதிநிதித்துவமும் படித்தவருக்கு வாக்குரி மையும் பெற்ற 1910 ஆம் ஆண்டின் முதல் வெற்றி பீரிசின் கன்னிப் போர் என்றும் அரசியற் பண்டிதர் கருதுகிறார்கள். ***இலங் கை அரசியற் பிணக்குகளையும் பிரச்சி னைகளையும் தீர்த்து வைப்பதில் எங்க ளுக்கெல்லாம் இன்றியமையாத உதவி யைச் செய்தவர் பீரிஸ் அவர்களே என*** E.W.பெரேராகுறிப்பிட்டுள்ளார். (தொடரும்)








சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி இந்துமாமன்றத்தினரால் கல்லூரி மண்டபத்தில் நடாத்தப்பட்ட வாணிவிழாவில் வாணி பூசை நடைபெறுவதையும், மாணவர்களது கலை நிகழ்ச்சியையும், அதிபர் க.அருந்தவபாலன் வித்தியாரம்பம்(ஏடுதொடக்கல்) ஆரம்பித்து வைப்பதனையும் காணலாம். (படங்கள்: சாவகச்சேரி நிருபர்)

# தெற்காசியாவில் வறுமைக் குறைப்பும் (5) பொருளாதார வளர்ச்சியும்



பூட்டான் கிரா மங்களில் வாழும் 90% மான மக் கள் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்கின்றனர். (ILO,1998) .. அத்துடன் தெற் காசியப் பிராந் தியத்தில் பாடசா லை இடை வில கல் (School drop-out) பிரச்சினை யும் தீவிரமடைந்து வருகின்றது. மேலும் மலேரி யா, காசநோய் (tuberculosis) போன்ற நோய்கள் மீண்டும் பரவத்தொடங்கியுள்ள துடன் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்படுவோர் தொகையும் அச்சுறுத்தும் வகையில் அதிக ரித்து வருகின்றது. மேலம் சமூகத் துறைக ளிலான பொதுச் செலவீனம். வினைத்திற னற்றதாக உள்ளதுடன் பொருளாதார வளர்ச் சியானது சூழலுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத் துவதாகவும் உள்ளது.

சூழல் மாசடைதல், காடழிப்பு (Deforestation) என்பன அதிகரித்த அளவில் இடம் பெறுகின்றன. தற்போது நகர சனத்தொகைப் பெருக்கம் சேரிகளின் (Slum) வளர்ச்சி என் பனவும் முக்கிய சூழல்சார் எழுவினாவாக (Enviornmmental issue) உருவாகியுள் ளது.

(அட்டவணை -04ஐ பார்க்க)

தெற்காசியாவில் வறுமையில் ஒரு வீழ்ச் சிப் போக்கினை 1981-2001 காலப் பகுதியில் அவதானிக்கமுடியும். 2001 ஆம்ஆண்டில் நாளொன்றுக்கு $ 1 (PPP US$- Purchasing-Power parity- கொள்வனவு சக்தி சம மதிப்பின் அடிப்படையில்) இற்கு குறைவான வருமானத்தில் வாழ்வோரின் அளவு 55.1% -31.9% என வீழ்ச்சியடைந் துள்ளது. (UNDP - மானிட அபிவிருத்தி அறிக்கை-2005).

அட்டவணை -04 இன் பிரகாரம், இந் நாடுகளில் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதி (Sanitation) என்பனவற் றிற்கு தீவிரமான பற்றாக்குறை நிலவுவ தனை அவதானிக்க முடிகிறது. பெண்கள் கல்வியறிவின்மை, சிறுவர் போஷாக்கின்மை (Child malnutrition) போன்றனவும் மானிட அபிவிருத்திக்கான முதன்மையான சவால்களாகக் காணப்படுகின்றன.

அட்டவணை -04 சார்க் நாடுகளின் சமூக -மானிட அபிவிருத்தி நிலை

| | இந்தியா | பாகிஸ்தான் | பங்களாதேஷ் | நேபாளம் | இலங்கை | பூட்டான் | மாலைதீவு |
|---|---|---|---|---|---|---|---|
| நாளொன்றுக்கு $1 வருமானம் பெறுவோர் (1993-PPP US$) -வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்வோர் (%) 1983-2000) | 44.2 | 31 | 29.1 | 37.7 | 6.6 | - | - |
| தேசிய வறுமைக்கோடு (1987-2000) | 26.1 | 34 | 35.6 | 42.0 | 25.0 | - | - |
| மருத்துவ சேவை(Health Service) வசதிகளற்ற சனத்தொகை-1995 (மொத்த சனத்தொகையின் % மாக) | 15 | 45 | 55 | - | 7 | 35 | 25 |
| சுகாதார வசதிகளற்ற சனத்தொக -2000 (மொத்த சனத்தொகையின் % மாக) | 69 | 39 | 47 | 73 | 17 | 31 | 44 |
| கல்வியறிவற்ற வயது வந்தோர் -2000 (மொத்த வயது வந்த சனத்தொகையின் % மாக) | 42.8 | 56.8 | 58.7 | 58.2 | 8.4 | - | 3.3 |
| கல்வியறிவற்ற வயது வந்த பெண்கள் -2000 (மொத்த வயது வந்த சனத்தொகையின் % மாக) | 55 | 72 | 70 | 76 | 11 | - | - |
| சிறுவர் போஷாக்கின்மை (5 வயதுக்கு குறைந்த சிறுவர்களின் % மாக) | 47 | 38 | 61 | 47 | 33 | - | - |
| சிசுமரணவீதம்-2000(துலா 1000 பிறப்புக்களுக்கு) | 96 | 110 | 82 | 100 | 19 | 100 | 80 |

*மூலம்:- தெற்காசியாவின் மானிட அபிவிருத்தி, 2002, ஒக்ஸ்போட்*

### நல்லாட்சி (Governance)

நல்லாட்சி என்பதனை ஒரு நாட்டினை ஆளுகின்ற அல்லது ஒரு கம்பனி அல்லது நிறுவன ஒழுங்கமைப்பு ஒன்றினை கட்டுப்ப டுத்தும் செயற்பாடு எனலாம். இது அரசிய லுடன் மட்டும் தொடர்புடையதல்ல. பல்வேறு அம்சங்களை இணைத்த ஒரு அதிகார நடைமுறையாகக் காணப்படுகின்றது. நல் லாட்சியானது நடுநிலை தவறாத தன்மை (Fairness), சிறந்த பண்புசார் நடத்தை (Decency), பதிலளிக்கும் பொறுப்பு (Accountability), வெளிப்படையான தன்மை (Transparency), பங்குபற்றல் (Participation), வினைத்திறன் (Efficiency) ஆகிய முதன்மைத் தத்துவங்களைக் கொண் டுள்ளது.

தெற்காசியாவில் முரண்பாடு - மோதல் களால் பாதிக்கப்பட்ட 71 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். பல நாடுகளில் ஊழல்கள் அனைத்து மட்டங்களிலும் வழக்கமாகி விட்டது. பங்களாதேஷ் கடந்த ஐந்து வருடங்களாக 'Transparency International' இன் பட்டியலில் கீழ் மட்டத்திலேயே இருந்து வருகின்றது.

அத்துடன் இலங்கை, பங்களாதேஷ் போன்ற நாடுகளில் தீவிரம் பெற்றுள்ள மோதல் அரசியல்(Confrontational Politics) நிலைமையானது நாட்டின் சமூக பொருளாதார கீழ்க்கட்டுமான வசதிகளை விருத்தி செய்வதற்கான வாய்ப்புகளை தவற விட காரணமாகின்றது. இலங்கையில் உள் நாட்டு யுத்தமில்லாது விடின் பொருளாதாரம் 2% -3% எனும் வீதத்தில் இன்னும் வேகமான வளர்ச்சியை சாதிக்கும் எனப்படுகின்றது.

அத்துடன் பாகிஸ்தானில் காணப்படும் இரா ணுவ ஆட்சி முறைமை மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் இடம்பெறும் பேரினவாத கட்சிகளின் ஆட்சிமுறை போன்றனவும் இப்பிராந்தியத்தின் நல்லாட்சியினை பாதித்து வருகின்றன.

**விமலேந்திரன் பாரதிதாஸ்**
உதவி விரிவுரையாளர்
பொருளியல்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

சார்க் நாடுகள் வறுமையை இல்லா தொழிப்பதில் மேற்கூறிய மூன்று சவால் களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. ஆயினும் 7% -10% வரையிலான கிழக்கா சியாவின் பொருளாதார வளர்ச்சி இலக் கினை இந்நாடுகள் அடைந்தால் பத்தாண்டு களில் வறுமையை மூன்றில் இரண்டு பங்கால் குறைக்கமுடியும் என உலக வங்கி அறிக்கையில் கூறப்படுவது கவனத்திற்கு கொள்ளப்பட வேண்டிய விடயாகும். (தொடரும்)

# விசேட தேவையுள்ள மாணவர் தொடர்பாக வலிகாமம் கல்விவலயத்தின் செயற்பாடுகள்

நமது நாட்டிலே நடைபெறும் போராட்டங்களின் மத்தியிலே தனது வாழ்வோடு போராட்டம் நடத்தி பல வேதனைகளின் மத்தியிலே சாதனை படைத்து வரும் விசேட தேவையுள்ளவர்கள் பற்றி சமூகத்தின் மத்தியிலே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இக் கட்டுரையை உங்கள் முன் சமர்ப்பிப்பதோடு இதற்காக கல்வி உலகம் இவர்கள் பால்கொண்டிருக்கும் அக்கறையையும் ஈடுபாட்டையும் மேலும் வளர்த்துக்கொள்ள உதவவேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

ஆரம்ப காலங்களில் உடல்,உள பாதிப்புக்குள்ளானவர்கள் பிறப்பு.மறுகணம் இறப்பு என்ற நிலையில் உயிரை உயிராக மதிக்காது காக்கைகளுக்கும் கழுகுகளுக்கும் இரையாக மலையுச்சியிலிருந்து வீசப்பட்டும் பெற்றோர்களே தமது குழந்தைகளை கொலை செய்யும் அளவுக்கு துணிந்த வரலாறுகள் பல சான்று பகிருகின்றன.



விசேட கல்வி ஆரம்ப அலகு ஆரம்ப விழாவின் போது...

அதனைத்தொடர்ந்து "முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படலாமா?" என்று வினவிய சமூகம் அக்கால மன்னர் ஆட்சிக் காலங்களில் அவர்களை பகடைக்காய்களாக படை நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தினர் என்பது வரலாறு.

உயிரைக் கொல்வது பாவம் என நினைத்த அக்கால சமய, சமூக அமைப்புக்கள் இவர்களை தமது பாராமரிப்பில் வைத்து பாதுகாக்க பராமரிப்பு நிலையங்களை ஆங்காங்கே நிறுவி அவர்களின் வாழ்வுக்கு உயிரூட்டத் தொடங்கின.

19ஆம் நூற்றாண்டில் இவ்வாறான விசேட உதவியை வேண்டி நிற்கும் பிள்ளைகளுக்கும் கல்வி புகட்ட வேண்டும் என உலகளாவிய ரீதியிலே மனித உரிமை கோஷங்கள் எழுப்பப்பட்டதன் விளைவாக வதிவிட பராமரிப்பு நிலையங்கள் விசேட பாடசாலைகளாக உருவாக்கம் பெற்றது. யாழ்ப்பாணத்திலே நவீல்ட் பாடசாலையும் கொழும்பு இரத்மலானையில் ஓர் பாடசாலையும் இவர்களுக்காக அரசால் நிறுவப்பட்டு கல்வி புகட்டப்பட்டு வந்தது.

1989 ஆம் ஆண்டு யுனெஸ்கோவினால் சிறுவர் உரிமை சாசனம் கைச்சாத்திடப்பட்டதன் விளைவாக சிறுவரின் உரிமைகள் பாதுகாக்க பல நாடுகளும் முன்வந்தன. 18 வயதிற்குட்பட்ட அனைவரும் சிறுவர்களாக மதிக்கப்பட்டு அவர்களுக்கான வாழும் உரிமை பாதுகாக்கும் உரிமை, பங்கேற்கும் உரிமை,சம கல்வி வாய்ப்புரிமை அடிப்படை உரிமைகளாக கருதப்படுகின்றது.

1990 ஆம் ஆண்டு தாய்லாந்தின் ஜொம்ரென் நகரில் யுனெஸ்கோவினால் எல்லோருக்கும் கல்வி என்ற சாசனத்தின் மூலம் சிறுவர்கள் அனைவருக்கும் கட்டாயக் கல்வி வழங்க நமது நாடும் கையெழுத்திட்டது. 1994 ஆம் ஆண்டு ஸ்பெயின் நாட்டின் சலமன்ஹா என்ற இடத்தில் உட்படுத்தல் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்மூலம் உலக நாடுகள் அனைத்தும் விசேட உதவி தேவைப்படும் மாணவர்கள் அனைவரும் சாதாரண பாடசாலைகளில் சாதாரண மாணவர்களுடன் வகுப்பறையில் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட உரித்துடைய வர்கள் என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டன.

இதனடிப்படையில் 2010 ஆம் ஆண்டு உட்படுத்தல்கல்வி ஆண்டாக பிரகடனப்படுத்த அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றமை வரவேற்கத்தக்கதாக அமைந்துள்ளது. இதனடிப்படையில் வீட்டுக்குள்ளே பூட்டிமுடக்கப்பட்ட உடல், உள பாதிப்புக்குள்ளான மாணவர்கள் வெளிக்கொணரப்பட்டு அவர்களுக்கான அடிப்படை கல்வியைப் பெற வாய்ப்பும் வசதியும் அளிக்கப்பட வேண்டிய தேவையுள்ளது.இதற்கான முன்னெடுப்புக்களை அரசாங்கம் தீவிரமாக முன்னெடுத்து வரும் அதேவேளை அதற்கு உறுதுணையாக அரச, அரச சார்பற்ற , சமூக, சமய, தொண்டு நிறுவனங்கள் உதவ முன்வர வேண்டும்.

ஏலவே இலங்கையின் தென்பகுதிகளில் விசேட கல்வித்துறைச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டபோதும் 2005ஆம் ஆண்டு தொடக்கமே வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டு கல்வி வலய மட்டங்களில் இச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

எமது நாட்டைப் பொறுத்தவரையில் விசேட உதவி தேவைப்படுவோர் 13 வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

1. மீத்திறன் கூடிய மாணவர்கள்
2. கற்றலில் இடர்ப்படுவோர்.
3. பேச்சுக் குறைபாடுடையோர்.
4. மனவளர்ச்சி குன்றியோர்.
5. மெல்லக்கற்போர்.
6. பார்வைக்குறைபாடுடையோர்.
7. கேட்டல் குறைபாடுடையோர்.
8. அங்கக் குறைபாடுடையோர்.
9. நோய்க்குறைபாடுடையோர்.
10. ஒன்றுக்கு மேற்பட்ட குறைபாடுடையோர்.
11. மூளை பாதித்தவர்.
12. உளப்பாதிப்புக்குள்ளானவர்.
13. டவுன்சிங்ரோம்/ ஓடிசம் குறைபாடுடையோர்.





விசேட கல்வி சிறுவர் முகாமின் போது...

மேற்கூறப்பட வகையினைரை சரியான முறையில் இனங்கண்டு அவர்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் அவர்களுக்கு உரியவேளையில் உரிய தேவைகளை நெறிப்படுத்தி வழிப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு ஒவ்வொரு அதிபர், ஆசிரியர் கைகளிலேயே தங்கியுள்ளது. அந்தவகையில் விசேட கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் வலிகாமம் கல்வி வலயம் ஆண்டுதோறும் விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகளையும், பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும், ஆசிரியர்களுக்கான செயலமர்வுகளையும் பாடசாலை தோறும் மருத்துவ பரிசோதனைகளையும் விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான சிறுவர் முகாம்களையும், மாற்று ஆற்றலுள்ளோர் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே சித்திரம், இசை, நடன, நாடக, பேச்சு, கவிதை,கட்டுரைப் போட்டிகளையும் மாற்று ஆற்றலுள்ளோர் தினத்தையும் சிறப்பாக நடத்தி வருவதுடன் விசேட தேவையுள்ள மாணவர்களுக்கான மூக்குக் கண்ணாடி, காதுகேள் கருவி,சக்கரநாற்காலி,கற்றல் உபகரணங்கள் என்பவற்றையும் வழங்கி வருகின்றது.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் இவ்வாண்டு பெறப்பட்ட தகவல் அடிப்படையில் பின்வரும் நான்கு கோட்டங்களிலும் இனங்காணப்பட்ட விசேட தேவையுள்ள மாணவர்கள் விபரம் தரப்படுகிறது.

| கோட்டங்கள் | பார்வை | கேட்டல் | பேச்சு | நோய் | விவேகக் குறைபாடு | அங்கவீனம் | கற்றல் இடர் | உளம் | மூளை பாதிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சங்கானை | 129 | 28 | 23 | 121 | 225 | 09 | 353 | 85 | 02 |
| சண்டிலிப்பாய் | 182 | 42 | 34 | 261 | 140 | 14 | 417 | 171 | 07 |
| தெல்லிப்பளை | 112 | 19 | 16 | 65 | 64 | 08 | 178 | 56 | 01 |
| உடுவில் | 76 | 07 | 20 | 64 | 58 | 04 | 136 | 42 | 05 |
| மொத்தம் | 499 | 96 | 93 | 511 | 487 | 35 | 1084 | 354 | 15 |

மேலும் இனங்காணப்பட வேண்டிய மாணவர்கள் தொடர்பான ஆய்வுகள் தற்போதும் என்னால் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இனங்காணப்பட்ட இம் மாணவர்களுக்கும் வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர் என்ற வகையில் நான் மேற்கொண்ட செயல் திட்டங்களை சுருக்கமாக கூறலாம் என எண்ணுகின்றேன்.

**1. மெல்வல்லுநர் போட்டி**

இம்முறை 47 பாடசாலைகளிலிருந்தும் 376 விசேட உதவி தேவைப்பட்ட மாணவர்கள் பங்குபற்றி தமது திறன்களை வெளிக்காட்டியதுடன் சமூகத்தில் தம்மாலும் எதனையும் சாதிக்க முடியும் என்பதனை நிரூபித்துக் காட்டினர்.

**2.விழிப்புணர்வுக் கருத்தரங்கு**

எனது பிரதேச பிரதான பாடசாலைகளுடன் அயற்பாடசாலைகளையும் இணைந்து பெற்றோர், ஆசிரியர், மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் ஒவ்வொரு மாதமும் வரும் போயா தினங்களில் நடத்தப்பட்டு வருகின்றது.

இக்கருத்தரங்கில் சிவபூமி பாடசாலை, ஆர்க் பாடசாலை, வாழ்வக மாணவர்களின் கலைநிகழ்வுகள் மூலம் தமது ஆற்றல்களை வெளிப்படுத்தி பாராட்டுக்களைப் பெற்று வருகின்றனர்.

**3. மருத்துவ பரிசோதனை முகாம்**

மாதம் தோறும் இரண்டு தடவைகள் யாழ்.போதனா வைத்தியசாலை தொழில் வழிச் சிகிச்சைப் பிரிவுடன் இணைந்து பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று மாணவர் உடல், உள,சமூகப் பாதிப்புக்கள் தொடர்பாக ஆராய்ந்து கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆலோசனைகளும் வழிகாட்டலும் மேற்கொள்ளப்பட்டதுடன் மேலதிக சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கும் அனுப்பிவைக்கப்பட்டனர்.

**4.சிறுவர் முகாம்**

வலிகாமம் கல்வி வலய விசேட கல்வி அலகில் மாதம் தோறும் இனங்காணப்பட்ட மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை ஏற்படுத்துவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாணவர் விருப்புடன் பங்கேற்று தமது அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்தி செய்து வருகின்றனர்.

**5. மாற்று ஆற்றலுள்ளோர் தினப் போட்டி**

சாதாரண மாணவர்கள் விசேட தேவையுள்ள மாணவர்களை தமது நண்பர்களாக சகோதரர்களாக ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கை விருத்தி செய்யும் நோக்குடன் இவ் வருடமும் சித்திர. இசை,நடன,நாடகப் போட்டிகளும், பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகளும் கோட்ட,வலய மட்டங்களில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**6. உபகரணம் வழங்கல்**

இவ் வருடம் இனங்காணப்பட்ட 72 மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகளும், 02 காதுகேள் கருவியும், 02 சக்கர நாற்காலியும், கற்றல் உபகரணப் பொதிகளும் எமது நிதியிலிருந்தும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடனும் வழங்கப்பட்டன.

**7. மாற்று ஆற்றலுள்ளோர் தினம்**

இவ் வருடமும் மாற்று ஆற்றலுள்ளோர் தினத்தை சிறப்பாகக் கொண்டாட தீர்மானிக்கப்பட்டுள்ளது.இத்தினத்தில் எமது பாடசாலை மாண வர்களுடன் சிவபூமி, ஆர்க்,வாழ்வக மாண வர்களின் கலைநிகழ்ச்சிகளையும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் மாணவர்களுக்கான பரிசில் வழங்கல்நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

**8. ஆசிரியர்களுக்கான செயலமர்வு**

சிறந்த வளவாளர்களின் உதவியுடன் ஆண்டு தோறும் செயலமர்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆர்க்,சிவபூமி,வாழ்வகம் ஆகிய விசேட நிலையங்களிலும் விசேட செயலமர்வுகள் நடத்தப்பட்டன.

இதுவரை

| | |
|---|---|
| ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் | 712 |
| இடைநிலைக்கல்வி ஆசிரியர்கள் | 236 |
| அழகியல் கல்வி ஆசிரியர்கள் | 114 |
| பட்டதாரி ஆசிரியர்கள் | 73 |
| தற்காலிக இணைப்பு ஆசிரியர்கள் | 47 |
| மொத்தம் | 1182 |

இவ் ஆசிரியர்களுக்கு விசேட கல்வியின் அடிப்படைக் கருத்துக்களும் உட்படுத்தல் கல்வியின் முக்கியத்துவம் மற்றும் கற்றல் கற்பித்தல் நுட்பங்கள் என்பன பற்றி அறிவூட்டல் செயலமர்வுகள் நடத்தப்பட்டு மேலும் அனைத்து ஆசிரியர்களுக்கும் தொடர் செயலமர்வுகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நி.முருகானந்தன்
விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர்
வலிகாமம் கல்வி வலயம்

மேலும் விசேட கல்வித் துறை வளர்ச்சிக்கு பலரும் தமது ஒத்துழைப்பை நல்கும்போது நிச்சயமாக விசேட உதவி தேவைப்படுவோரிடையே மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்பது நமது நம்பிக்கை அத்துடன் இவர்களின் மனங்களை சிதைக்கும் வார்த்தைப் பிரயோகங்களை நாம் தவிர்த்து அவர்களினை நாம் மாற்று ஆற்றலுள்ளோர், மாற்று வலுவுள்ளோர் , விசேட உதவி தேவைப்படுவோர் என அழைத்தல் சாலச் சிறந்ததாகும். ◆

# க.பொ.த. (சா/த) பரீட்சை-2008


பகுதி :- I

## பயிற்சி வினாத்தாள்

நேரம் 1 மணி

### வரலாறு

மு.வேலாயுத பிள்ளை
உப அதிபர் –கொக்குவில்
இந்துக்கல்லூரி



**பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

**01 முதல் 05 வரையான வினாக்களுக்கு உலகப் படத்தை அவதானித்து விடை தருக.**

1. சோவியத் ரஷ்யாவில் இருந்து பிரிந்து சென்ற நாடுகளில் F எனக் குறிக்கப்பட்ட நாடு எது?
   1.உக்கிரைன் 2.மொஸ்கோ 3.எக்குட்ஸ் 4.லிதுவேனியா

2. 2 ஆம் உலக மகா யுத்த காலத்தில் அணுகுண்டு வீசப்பட்ட ஹிரோசிமா , நாகசாகி நகரம் அமைந்த இடத்தை குறிப்பது?
   1. Km 2. Lm 3. Nk 4. KL

3. 1453 ஆம் ஆண்டு துருக்கியில் கைப்பற்றிய பகுதி E எனக் காட்டப்பட்டுள்ளது. அந்தநகரம் எது?
   1.இஸ்தான்புல் 2.கங்கேரி 3.போலந்து 4.சேர்பியா

4. நாசிசம் ,பாசிச கோட்பாடுகள் வளர்ச்சி அடைந்த நாடாகக் காணப்படுவது?
   1. HE 2. HG 3. HQ 4. HK

5. சர்வதேச நீதிமன்றம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தலைமை செயலகம் அமைந்துள்ள இடத்தை குறிப்பது?
   1. BI 2.CA 3. GF 4. AH

**6 ஆம் வினாவில் இருந்து 10 ஆம் வினா வரை இலங்கை படத்தை அவதானித்து விடையளிக்குக.**




6. துட்டகை முனு மன்னன் எல்லாளனுக்கு எதிராக படை எடுத்துச் சென்ற பாதையில் ML எனக் குறிக்கப் பட்ட இடங்களின் சரியான தொகுதி
   1. தீகவாபி , மகியங்கனை 2.துமரக்கபப்பத, குட்டசால
   3.துமரக்பப்பத,மகியங்கனை 4.கச்சக தீர்த்த, விகித்தபுர

7. 1 ஆம் பராக்கிரபாகு மன்னன் பண்டுவஸ்நுவர பகுதியை வளமான பகுதியாக மாற்றிய இடத்தை குறிப்பது?
   1. C 2.D 3.O 4. N

8. இலங்கையின் நீண்டகாலமாக விளங்கிய தலைநகராக இருந்த இடம் எது?
   1.O 2.N 3. F 4.D

9. சங்கமித்தை, மகிந்த தேரோ இலங்கைக்கு வந்தடைந்த பகுதியாக காணப்படு வது?
   1. RB 2.AB 3. BF 4. RA

10. மகா நாமகுல ,குட்டசால, ஸ்ரீவர்ணபுர பகுதிகளின் சரியான தொகுதி எது?
    1.HGI 2.HJP 3. DPL 4.HEJ

11. கீழே தரப்பட்டுள்ள நீர்ப்பாசன அமைப்புக்களில் மகாசேன மன்னனால் கட்டப்பட்ட குளம், கால் வாயின் சரியான தொகுதி எது?
    1. மயெந்திகுளம் ,ராஜப்பலகுளம் ,எலகரகால்வாய்
    2.மின்னேரியா ,குருளுவாவி ,பப்பதன்னகால்வாய்
    3.மின்னேரியா ,கலாவாவி ,ஜயகங்கை
    4.மின்னேரியா.கிரிந்தலை ,எலகரகால்வாய்

12. கண்டி இராச்சியம் எந்த பிரித்தானிய ஆளுநரின் காலத்தில் சுதந்திரத்தை இழந்தது?
    1.பிரடிக்நோத் 2.தோமன் மெயிற்லண்ட்
    3.றொபேட்பிறவுண்றிக் 4.றொறிங்டன்

13. உன்னதமான கலைத் திறனுக்கும் கட்டிட கலை அமைப்புக்கும் உதாரணமாக விளங்குவது?
    1. சிகிரியா கண்ணாடிசுவர் 2. கலிங்கல் தொட்டி
    3. ருவன் வெலிசாய யானை சுவர் 4. அநுராதபுர குட்டம் பொகுன தடாகம்

14. A .மகிந்த தேரோ இலங்கைக்கு வந்தமை
    B.பிக்குனி சங்கமித்தையும் 18 குழுவினரும் வந்தமை
    C.பத்தகச்சானா இளவரசியும் அவளது சகோதரர்களும்
    D.பாண்டுவாச தேவனின் குழுவினர்
    ABCD எனக் காட்டப்பட்டுள்ள குழுக்கள் இலங்கைக்கு வருகை தந்த வரலாற்று ஒழுங்கை திருத்த மாகக் காட்டும் விடை?
    1. ABCD 2. DCAB 3.BCDA 4.CDAB

15. கீழே தரப்பட்ட கூற்றுக்களின் அடிப்படையில் பிரான்சிய புரட்சியின் விளைவைக் காட்டும் விடை எது?
    A .முதலாளித்துவ முறையை உருவாக்கல்
    B. பிரபுக்களின் அதிகாரம் குறைந்தமை
    C.ஒடுக்கப்பட்ட விவாசாய வகுப்பு ஒன்று உருவாகியமை
    D.மானியமுறை பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்தமை
    1. A B 2. BC 3.CD 4.AD

16. இலங்கை அரசியல் யாப்பு தொடர்பாக நிரல் I க்கு ஏற்ப நிரல் II ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடை.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| A. முதலாவது தேசாதிபதி நியமனம் | E 1833 |
| B. பாராளுமன்றம் நிறுவுதல் | F 1978 |
| C. ஓம்புட்ஸ் அமைப்பு உருவாக்கல் | G 1947 |
| D. சட்ட நிரூப நிர்வாகசபை உருவாக்கம் | H 1912 |
| | I 1948 |

    1. HGFE 2. FFGH 3.FGHI 4.IHEF

17. வானவியலின் தந்தையென அழைக்கப்படுபவர் யார்?
    1. லியனாடோ டாவின்சி 2. நிக்கலஸ் கொப்பனிகஸ்
    3. மைக்கல் அஞ்சலோ 4.யொகனஸ் கெப்பிலர்

18. பின்வரும் நூல்கள் எந்த காலத்தில் எழுதப்பட்டது என்பதை ஒழுங்குபடுத்துக?

| | |
|---|---|
| A விசுத்திமார்க்க சன்னய | E கோட்டை |
| B சிங்கள போதி வங்க | F கம்பளை |
| C மயுரசந்தேச | G குருநாகல் |
| D பரகும்பசரித | H தம்பதெனியா |
| | I யாப்பகூவா |

    1.HGFE 2.EFGH 3.GHIE 4.GEFI

19. கைத்தொழில்புரட்சி காரணமாக மட்டும் ஏற்பட்ட சாதகமான விளைவுகளைப் பின்வரும் கூற்றுக்களி லிருந்து தெரிவு செய்க?
    A.மனித உழைப்புக்கு பதிலாக இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டமை
    B.மூலதனத்தை வழங்கும் பல்வேறு நிதித்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட்டமை
    C.சம்பளம் பெறும் தொழிலாளர் வகுப்பு உருவாகியமை
    D .பிள்ளைகளை கூடிய மணித்தியாலங்களுக்கு சேவையில் அமர்த்த முடிந்தமை
    1.A யும் Bயும் 2. Bயும் Cயும் 3.Cயும் D யும் 4. D யும் Aயும்

20. பின்வரும் சம்பவங்களில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் சுதந்திர போராட்டத்துடன் தொடர்பு உடையது எது?
    1. மக்னாகாட்டி சாசனத்தில் கையொப்பமிட்டமை 2.அனுசக்தி உற்பத்தி மேற்கொள்ளப்பட்டமை
    3.முதலாவது எழுதப்பட்ட அரசியல் யாப்பு 4.பேள் துறைமுகத்துக்கு குண்டு போடப்பட்டமை

21. பின்வரும் நடவடிக்கைகளை 2ஆம் உலக மகாயுத்தத்துடன் தொடர்புடைய விடை எது?
    A வேர்செயில் உடன்படிக்கை உருவாக்கப்பட்டமை
    B பேள் துறைமுகத்துக்கு குண்டு வீசியமை
    C செரஜீவா சம்பவம்
    D பிரித்தானிய குடியேற்றங்களுக்கு சுதந்திரம் வழங்கியமை
    1.AB 2.BC 3.AC 4.CD

22. 1815 ஆம்ஆண்டு ஆங்கிலேயர் கண்டி இராச்சியம் கைப்பற்றிய பின்னர் புதிய ஆட்சி முறைக்கு எதிராக கலகம் ஏற்பட காரணம் என்ன?
    1.புனித தந்த தாது ஆங்கிலேயரால் கைப்பற்றபட்டமை
    2.விவசாய நடவடிக்கை புறக்கணிக்கப்பட்டமை
    3.தோட்ட நிலங்கள் சிறு தொகைபணத்துக்கு பெற்றுக் கொண்டமை
    4.மரபு வழி வந்த பழக்க வழக்கங்கள் ,சம்பிரதாயங்கள் புறக்கணிக்கப்பட்டமை

23. பிரித்தானிய ஆட்சியில் பெருந்தோட்டப் பயிர் செய்கைப் பரம்பலின் விளைவாக மலைநாட்டு மக்கள் எதிர் நோக்கிய பிரச்சினையாக காணப்படுவது?
    1. காணிப் பற்றாக்குறை ஏற்பட்டமை
    2.தன்னிறைவு பொருளாதாரம் அழிந்தமை
    3. மண்ணரிப்புத் தன்மை அதிகரித்தமை
    4. உள்நாட்டில் குறைந்த ஊதியத்தில் தொழிலாளர் பெற்றுக் கொண்டமை

24. பின்வரும் நிகழ்வுகளை வரலாற்று ஒழுங்கு முறைப்படி ஒழுங்குபடுத்துக.
    A.கலிலியோ கலிலி தொலைகாட்டி கண்டுபிடித்தல்
    B.துருக்கியின் கொன்தான்சி நோபல் நகர் கைப்பற்றியமை
    C. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தமை
    D.பிரான்சிய புரட்சி ஏற்பட்டமை
    E.பொல்சேவியக் கட்சி உருவாக்கப்பட்டமை
    1.BCDAE 2.BCADE 3.CADEB 4.ABCDE

25. மலையகத்தில் புதிய அரச வம்சத்தினரை உருவாக்கல் ,போர்த்துக்கேயருக்கு எதிராக நடவடிக்கை மேற் கொள்ளல், சமய விழிப்புணர்ச்சி ஏற்படுத்தல் , பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்த மலையக மன்னன்?
    1.2 ஆம் இராஜசிங்கன் 2.ஸ்ரீ வீரபராக்கிரமபாகு நரேந்திரசிங்
    3.1 ஆம் விமலதர்ம சூரியன் 4.ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன்

26. 2ஆம் இராஜசிங்க மன்னன் ஒல்லாந்தருடன் முதலாவது ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டதன் நோக்கம் யாது?
    1.போர்த்துக்கேயரின் கெடுபிடி குறைத்தல்
    2.வாசனை திரவியங்களை பெற்றுக் கொள்ளல்
    3.போர்த்துக் கேயருக்கு பதிலாக ஒல்லாந்தரை வரவழைக்க
    4.நாட்டின் தேசியதன்மை பாதுகாக்க

27. மலையகஇராச்சியத்தில் சிறந்து விளங்கிய சித்திரகலை தொடர்புடைய பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றுகளை தெரிவு செய்க
    A. ஜாதக கதைகளும் புத்தரின் வாழ்க்கையை பிரதி பலிப்பது
    B .சிகிரியா ஓவியக் கலையின் செல்வாக்கு
    C. மலையக சித்திரக்கலை புராதன சித்திரக் கலை மரபில் இருந்து வேறுபட்டிருக்கவில்லை
    D.கங்காராமை , தலதாமாளிகை , ரிதிவிகாரை, மலையக சித்திரக்கலையை அவதானிக்கலாம்
    E .ஓவியங்கள் சுவர்களிலும் பனையோலைகளிலும் இருந்தமை
    1.ACD 2.BCD 3.DEA 4.BCE

28. சுதந்திரமாக பிறந்த மனிதன் சமமான உரிமைகளை அனுபவித்தற்கு உரித்துடையவன் என்றகூற்று எந்த கூற்றுடன் தொடர்புபட்டது?
    1.ஆங்கிலப் புரட்சி 2.பிரான்சியப்புரட்சி 3.அமெரிக்கப்புரட்சி 4. ரஷ்சியப்புரட்சி

29. 13 ஆம் நூற்றாண்டில் இருந்து 16 ஆம் நூற்றாண்டுவரை இஸ்லாமியராச்சியம் வளர்ச்சி அடைந்தது . ஆனால் டில்லி சுல்தான் பேரரசு வீழ்ச்சி அடைவதற்கு எக்காரணி உதவி யது?
    1.படைப்பலம் குறைந்தமை
    2. பிராந்திய மன்னர்களின் நிர்வாக திறன் இன்மை
    3.துக்ளக்மன்னன் டெல்கியில் இருந்து தௌலபாத்துக்கு தலைநகராக்கியமை
    4.மொகலாய பேரரசின் வளர்ச்சி

30. காஷ்மீரிலிருந்து அகமபாத் வரையிலும் சிந்துப் பிரதேசத்திலிருந்து வங்காளம் வரையிலும் கந்தகாரிலிருந்து ஒரிசா வரையும் அக்பர் மன்னன் காலத்தில் பரவியிருந்த பேரரசு எது?
    1.இஸ்லாமியபேரரசு 2. மொகலாய பேரசு
    3. விஜயநரகம் 4.பாமினி இராச்சியம்

31. பாமினியன் புத்தர் சிலை எந்த நாட்டில் உள்ளது?
    1.இந்தியா 2. சீனா 3.ஆப்கானிஸ்தான் 4. பர்மா

32. மானிய முறை பொருளாதாரம் வீழ்ச்சி அடைவதற்கு பின்வரும் காரணிகளில் எது பொருந்தாத கூற்று ஆகும்.
    1.சிலுவைப் போர் ஏற்பட்டமை 2.தேசிய அரசுகளின் தோற்றம்
    3.சமய சீர் திருத்த இயக்கம் 4 . மானிய பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படை யாகக்கொண்டது.

33. பின்வருவனவற்றை ஒழுங்குபடுத்தி சரியான விடையை அடையாளம் செய்க

| | |
|---|---|
| A மைக்கல் அஞ்சலோ | E சேக்ஷ்பியர் |
| B தொலைக்காட்டி | F பீற்றர் சிலை |
| C பூமி உருண்டை வடிவம் | G கலிலியோ கலிலி |
| D நூலாசிரியர் | H ஜொகனஸ் கெப்பிலர் |
| | F நிக்கலஸ் கொப்பனிகஸ் |

    1.EFGH 2.FGHI 3..GHIE 4.FGFE

34. ஜாவாத்தீவு, பாலி ஆகிய இந்தோனேசியக் தீவு கூட்டத்தில் புத்தரின் முற்பிறவி செய்திகளைக்கூறும் செதுக்கல் காணப்படும் விகாரை எது?
    1. போரோ புதூர்விகாரை 2.ருவன் வெலிசாய
    3. மிருசுவெட்டி தாதுகோபம் 4.கல்விகாரை

35. கீழைத்தேசப் பண்டங்களை பெற்ற நகரங்களான கம்பர்க், லுபெக் பிரேட்டன் ஆகியவை முக்கிய வர்த்தக நகரங்களாலும் இவை காணப்படும் பிரதேசமாக காணப்படுவது?
    1.பால்டிக்கடல் 2.மத்திய தரைக்கடல் 3. வட கடல் 4.எற்றியாற்றிக் கடல்

36. இஸபெல்லா இளவரசியின் உதவியுடன் 1492ஆம் ஆண்டு கிறிஸ்தோபர் கொலம்பஸ் அத்திலாந்திக் சமுத்திரத்தின் ஊடாக மேற்குப் பகுதியை வந்தடைந்தான் அவ்விடம் எதுவாகக் குறிப்பிடப்படுகின்றது?
    1.போர்த்துக்கல் 2.ஸபானியா 3. இந்தியா 4.இந்தோனேசியா

37. 12ஆம் நூற்றாண்டில் வொல்டென்சியன். அல்பிகென்சியன் என்ற பெயர்களில் திருச்சபைக்கு எதிரான கருத்துக்கள் வளர்ச்சி அடைந்து தீயிட்டுக் கொளுத்தப்பட்டவர் யார்?
    1.யோன் வைக்கிளிப் 2.யோன் ஹாஸ்
    3. மாட்டின் லூதர் 4. செனட் பேர்னாட்

38. ஐரோப்பிய நாடுகளில் தேசிய அரசுகள் தோற்றம் பெற்ற போதும் முதல் முதல் தேசிய அரசை உருவாக்கிய நாடு எது?
    1.பிரான்ஸ் 2.ஜேர்மனி 3.இத்தாலி 4.ஸ்பானியா

39. இலங்காஸ்டர் குடும்பத்தைச் சேர்ந்த மன்னன் ரோசாப்பூ யுத்தத்தில் வெற்றி அடைந்து ரீயுடா வம்சத்தை ஆரம்பித்த மன்னன் யார்?
    1. 6 ஆம் ஹென்றி 2. 7ஆம் ஹென்றி 3. 4 ஆம் லூயி 4. 8ஆம் ஹென்றி

40. பின்வரும் நிரல் I நிரல் II என காட்டப்பட்டவற்றை ஒழுங்கு படுத்தி சரியான விடைய்ய இனம் காண்க.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1.புரட்டஸ்லாந்து மதம் | A பிரான்ஸ் |
| 2.பாப்பாண்டவர் | B ஸ்பானியா |
| 3.யோன் கட்டன் பேர்க் | C மாட்டின் லூதர் |
| 4.இஸடெலா அரசி | D வத்திக்கான் |
| 5.கோல்பிரதேசம் | E அச்சு இயந்திரம் |
| | F இங்கிலாந்து |

    1.CDEBA 2.ABCDE 3.BCDEF 4.CDEFA

41. மத்திய காலத்தில் இருந்து நவீன காலத்திற்கு ஐரோப்பா முன்னேறியமையை குறிப்பது எது?
    1. அதிகாரப் பரவலாக்கத்தோடு முடியாட்சி 2.இணைந்த ஐரோப்பிய கிறிஸ்தவ திருச்சபை
    3.வர்த்தகம் சார்ந்த முதலாளித்துவத்தின் எழுச்சி 4.புவியியல் கண்டுப்பிடிப்புகள்.

42. மேற்கூறியவற்றில் ஜேர்மனியை இணைப்பதற்கு சாதகமாக அமைந்த காரணங்கள் யாவை?
    1. ஒஸ்ரியா வழங்கிய ஆதரவு
    2.சோல்பரைன்
    3.பிஸ்மார்க்கினுடைய இராஜதந்திர ஆற்றல்
    4.லொறன்ஸ் அல்சேஸ் பகுதிகளை ஜேர்மனிக்கு வழங்குவதற்கு பிரான்ஸ் உடன்பட்டமை.

# அரசியல் முக்கியஸ்தர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதாக இலங்கைப் படைத்தரப்பு அச்சம்

(கொழும்பு)

கடந்த வாரம் அமைச்சர் மைத்தரிபால சிறிசேனவின் தாக்குதலை நடத்திய தற்கொலைப் போராளிக்கு இறுதியாக கொழும்பு கறுவாத் தோட்டத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து தொலைபேசி அழைப்புக் கிடைத்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதனையடுத்து அரசியல் மற்றும் அரசியல் முக்கியஸ்த்தர்களுக்கான உயிர் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளதாக படைத்தரப்பு அச்சம் வெளியிட்டுள்ளது.

அமைச்சர் சிறிசேனவின் வாகனத் தொடரணி அண்மையில் பொரலஸ்கமுவ பகுதியில் வைத்து தற்கொலை போராளியின் தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தது.

எனினும் அதில் மைத்தரிபால சிறிசேன உயிர்தப்பினார்.

இந்த நிலையில் அமைச்சர் மைத்திலிபால சிறிசேன நிகழ்வு ஒன்றில் பங்கேற்றுவிட்டு திரும்பும் போது கறுவாத் தோட்ட அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து தற்கொலையாளிக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தியவர் யார் என்ற விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

கறுவாத் தோட்டப் பகுதியிலேயே பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவ உயரதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் பலரின் வீடுகள் அமைந்துள்ளன.

இந்த நிலையில் அந்தப் பிரதேசத்தில் இருந்து தற்கொலைதாரிக்கு தகவல் அனுப்பட்டமையானது முக்கியஸ்தர்களின் உயிர்களுக்குப் பாரிய அச்சறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் முக்கியஸ்தர்கள் தொடர்பான தகவல்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் துல்லியமாக கிடைத்திருக்கலாம் என படைத்தரப்பு அச்சம் வெளியிட்டுள்ளது. ஓ

## இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக டில்லியில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(புதுடில்லி)

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு எதிராக நடைபெறும் மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்தக் கோரி அனைத்துக் கட்சிகளும் போராடி வருகின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள கல்லூரி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களும் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் டில்லியில் உள்ள பல்கலைக் கழகங்களில் படிக்கும் தமிழ் மாணவர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஓ

# இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பில் கட்சி மேலிடம் தான் முடிவு செய்ய வேண்டும்


## தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு

(புது டில்லி)

இலங்கை தமிழர் பிரச்சினை தொடர்பாக காங்கிரஸ் எம்.பிக்கள் ராஜினாமா செய்வது குறித்து கட்சி மேலிடம் தான் முடிவு செய்யும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் தங்கபாலு கூறியுள்ளார்.

இலங்கையில் விடுதலைப்புலிகளுடன் இராணுவம் நடத்தி வரும் போரில் அப்பாவி தமிழர்கள்பாதிக்கப்பட்டுள்ளனர். இதை உடனடியாக தடுத்து நிறுத்த மத்தியஅரசுமுயற்சி மேற் கொள்ளவேண்டும்.

இல்லைஎன்றால் தமிழக நாடாளுமன்ற



உறுப்பினர்கள் கூண்டோடு ராஜினாமா செய்வார்கள் என்று அண்மையில் நடந்த அனைத்துக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது .தி.மு.க எம்.பிக்கள் தங்கள் ராஜினாமா கடிதங்களை முதல்வர் கருணாநிதியிடம் அளித்துள்ளனர்.

இந்நிலையில் டெல்லியில் வெளியுறவு அமைச்சர்பிரணாப் முகர்ஜியைதமிழக காங்கிரஸ் தலைவர் தங்பாலு நேற்று முன்தினம் சந்தித்து பேசினார் .பின்னர் நிருபர்களிடம் அவர் கூறியதாவது,

இலங்கையில் அப்பாவி தமிழர்களை காப்பாற்ற சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் இந்தியா எடுக்கும் என்று பிராணாப் முகர்ஜி உறுதி அளித்தார்.

பிரச்சினைக்குத் தீர்வு காண பிரதமர் மன்மோகன் சிங்கைசந்தித்து நிலைமையை விளக்குவேன்.தமிழர்கள் மீதான தாக்குதலை தடுக்க இலங்கை அதிபர் ராஜபக்ஷவுடன் பிரதமர் மன்மோகன் தொலை பேசியில் பேசியிருப்பது வரவேற்கத்தக்கது.

இலங்கை தமிழர் பிரச்சினைக்காக தனிப்பட்ட முறையில் எம்.பி பதவியை இராஜினாமாசெய்யத்தயாராக இருக்கிறேன். ஆனால் காங்கிரஸ் எம்.பிக்கள் பதவி விலகுவது குறித்து கட்சித் தலைமை தான் முடிவுசெய்ய வேண்டும்.

இது குறித்து காங்கிரஸ் தலைமை சரியான நேரத்தில் முடிவு செய்யும் .காங்கிரஸ் ஒருதேசியக் கட்சி என்ற முறையில் தலை மையிடம் கேட்காமல் நாங்கள்முடிவுசெய்ய முடியாது இதை அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் தெரிவித்தேன்.

இலங்கைத் தமிழர் நலனில் காங்கிரஸ் அக்கறை கொண்டுள்ளது. இவ்வாறு தங்கபாலு கூறினார். ஓ

# கழுவுற மீனில் நழுவுற மீனாக இருக்கிறது இந்திய அரசு

## விஜய டி. இராஜேந்தர்


(சென்னை)

ஈழத்தில் தமிழர்கள் தாக்கப்படுகிறார்கள் என்று தமிழகத்தில் பரவலாகப் பல்வேறு தரப்பினரும் குரல்கொடுத்து வருகின்றனர். ஆனால் காங்கிரஸ் கட்சிப்பேச்சாளரோ எடுத்த எடுப்பிலேயே இலங்கையில் நடப்பது உள்நாட்டுப் பிரச்சினை என்றுஏன் தவறான கருத்தைச் சொல்லியிருக்கிறாரோ தெரியவில்லை இது மிகவும் வருத்தத்தை ஏற்படுத்துகிறது. தமிழர்கள் இதனால் மிகுந்த கவலை அடைந்துள்ளனர்.

ஆக பிரதமரைச் சுற்றி இருப்பவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பது தெளிவாகிறது. இது பிரதமரின் கருத்தா? காங்கிரசின் கருத்தா அல்லது காங்கிரஸ் பேச்சாளர் சிங்வியின் சொந்தக் கருத்தா? மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகுவார்கள் என தமிழக முதல்வர் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது.அவரது தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எனது கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துச் சொன்னேன். மத் திய அரசு சரியான முடிவெடுக்க வேண்டும்.

இலங் கைக் கான இராணுவ உதவிகளை இந் திய அரசு அடி யோடு நிறுத்த வேண்டும். அப் போது தான் தமி ழர்கள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படும்.

ஆனால்இவ்வளவு நடந்தும் இந்தளவு எதிர்ப்பு தெரிவித்தும் கூட இலங்கை அரசு தனது போர் நடவடிக்கைகளைத் தொடரும் என அறிவித்துள்ளது. இந்தளவு சிங்களவர்கள் கொக்கரிக்கிறார்கள் என்று சொன்னால் என்ன அர்த்தம்? இந்திய அரசு அவர்களு



டன் ஏதாவது ஒப்பந்தம் செய்து கொண்டிருக் கிறதா? அப்படியானால் அது எழுதப்பட்ட ஒப் பந்தமா?இல்லை எழுதப்படாத ஒப்பந்தமா? அல்லது இலங்கை அரசு வேண்டுமென்றே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது போன்றதொரு மாயையை உருவாக்குகிறதா?

இது தேர்தலுக்காக நாங்கள் நடத்தும் போராட்டம் அல்ல நான் தேர்தலைக் கருத்தில் கொள்ளாமல் நீண்ட காலமாக ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுத்து வருகிறேன்.

உண்மையான தமிழ் ஆர்வலர்கள் தமிழ் இன பற்றாளர்கள் தமிழகத்தில் இருப்பதை இலங்கை அரசு மறந்து விடக்கூடாது.

நாளை செவ்வாய் கிழமை நடை பெறும் தமிழக முதல்வர் அறிவித்துள்ள மனிதச் சங்கிலி போராட்டத்தின் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்த விழிப்புணர்ச்சி தமிழகத்தில் மேலும் அதிகரிக்கும் . இன்று பள்ளி , கல்லூரி மாணவர்கள்கூட இதற்காகப் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள். கழுவுற மீனில் நழுவுற மீனாக இருக்கிறது இந்திய அரசு. இனிமேலும் இப்படியே தொடர முடியாது.

தற் போது இந்திய நாடாளுமன்றம் கூடியுள்ள வேளையில் மத்திய அரசு தமிழக மக்களுக்குச் சரியான பதிலைச் சொல்ல வேண்டியிருக்கும். இல்லை யென்றால் நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு சரியான பாடம் புகட்ட நேரிடும். ஓ

# இலங்கைப் பிரச்சினை சூடு பிடித்துள்ள நிலையில் அ.தி.மு.க.- ம.தி.மு.க. இடையே விரிசல்?

(சென்னை)

கடந்த ஒரு மாதமாக தமிழகத்தை உலுக்கிக் கொண்டிருக்கும் பிரச்சினையாக இலங்கைத் தமிழர்கள் விவகாரம் உருவெடுத்துள்ளது. இப்பிரச்சினை அ.தி.மு.க., ம.தி. மு.க. இடையே விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் பாதிக்கப்படும் தமிழர்களுக்காக இந்திய கம்யூனிஸ்ட் உண்ணாவிரதம் இருந்தது. இப்பிரச்சினையில் அரசியல் முக்கியத்துவத்தை ஏற்படுத்தியது. தொடர்ந்து நடைபெற்ற தி.மு.க. பொதுக்கூட்டம், கடந்த 14ஆம் திகதி தலைமைச் செயலகத்தில் நடந்த அனைத்துக்கட்சி கூட்டம், எம்.பி.க்களின் ராஜினாமா மிரட்டல், பிரதமர் கருத்து என இலங்கைத் தமிழர் பிரச்சினை சூடுபிடித்து வருகிறது.

இலங்கைப் பிரச்சினையில் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளின் நிலை மற்றும் முரண்பட்ட கூட்டணிகள் இதில் வெளிவரத் தொடங்கியுள்ளன. ஆரம்ப காலம் முதல் விடுதலைப்புலிகளின் இந்திய வக்கீலாக இருந்து வாதிட்டு வருபவர் வைகோ.இப் பிரச்சினையில் விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக அவர் இன்றும் குரல்கொடுத்து வருகிறார். ஆனால் ஆரம்பகாலம் முதல் விடுதலைப்புலிகளை எதிர்த்து வரும் கட்சியான அ.தி.மு.க. தனது நிலையை இப்பிரச்சினை மூலம் மீண்டும் ஒரு முறை தெளிவு படுத்தியுள்ளது. இரண்டு கட்சிகளுக்கிடையே உள்ள முரண் பாடுகள் இப்







பிரச்சினையில் வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியுள்ளன. இலங்கையில் நடைபெறுவது ஈழப் போராட் டம் என வைகோ. வர்ணிக்கிறார். ஆனால் இலங்கையில் உள்ள அதிகாரபூர்வ அரசுக் கும், பயங்கரவாத இயக்கமான விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடக்கும் போர் என்கி றார் ஜெயலலிதா .

முதல்வர் கருணாநிதி தலைமையில் நடந்த அனைத்துக்கட்சிக்கூட்டம் கபட நாடகம் என ஜெயலலிதா விமர்சித்துள்ளார். அனைத்துக் கட்சிக்கூட்டத்தை ம.தி.மு.க. பொதுச்செய லாளர் வைகோ விமர்சித்திருந்தாலும் அக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தை மறைமுகமாக ஆதரிக்கும் வகையில் எனது கட்சி எம்.பிக்களும் இராஜினமா செய்யத் தயார் எனப் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

வைகோவின் முடிவை முதல்வர் கருணாநிதி பாராட்டியுள்ளதும் அ.தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள ம.தி.மு.க.வுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெறும் போரில் அப்பாவி தமிழர்கள் பாதிக்கப்படுகின்றனர். அவர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அ.தி.மு.க.வின் கோரிக்கையாகவுள்ளது.

ஆனால் அப்பாவித்தமிழர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்ற பெயரில் விடுதலைப் புலிகளுக்கு எந்தப்பாதிப்பும் ஏற்படாமல் தடுக்க வேண்டும் என்பது ம.தி.மு.க வின் கொள்கை நிலைப்பாடாக உள்ளது.

இதில் இரண்டு கட்சிகளுக்கும் இடையே உள்ள முரண்பாடு வெளிச்சத்துக்கு வந்துள்ளது. முரண்பட்ட கொள்கையுடைய கட்சிகள் கூட்டணி அமைத்தால் ஏற்படும் விளைவுகளை அ.தி.மு.கவும் , ம.தி.மு.க வும் இலங்கைப் பிரச்சினையில் தற்போது சந்தித்து வருகின்றன. இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி முதல்வர் கருணா நிதியும் தன் பங்கிற்கு அவர்களிடையே உள்ள கொள்கை முரண்பாடுகளை சீண்டி விட்டுள்ளார்.

சில தினங்களுக்கு முன் அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் ஜெயலலிதாவின் கருத்துக்களை பாராட்டும் வகையில் இலங்கை அதிபரின் ஆலோசகரும்,சகோதரருமான பசில் ராஜபக்ஷ பேசியிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசுக்கு ஆதரவான கருத்தை ஜெயலலிதா வெளியிட்டுள்ளதற்கு வைகோ பதில் சொல்ல வேண்டும் என்றும் கேட்டுள்ளார். அ.தி.மு.க.- ம.தி.மு.கவுக்கு மிடையே உள்ள இரண்டாண்டு கால அரசியல் கூட்டணி முடிவதற்குக்கூட இப்பிரச்சினை காரணமாக அமையலாம் என அரசியல் வட்டாரங் களில் கூறப்படுகின்றது. ஓ

பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் அதை கவர்ச்சி மிக்க பலன்கள் கிட்டும் வாழ்க்கையாகக் கருதக் கூடாது.

– டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

# இந்தியாவின் தலையீடு யுத்தத்தை நிறுத்துமா?

இலங்கை இன விவகாரம் குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

பேசப்பட்ட விடயம் என்ன? என்பது வெளிச்சத்துக்கு வராதபோதிலும் யுத்தத்தை நிறுத்தி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தியிருப்பார் என்பது தெரிந்த விடயம்.

வன்னிப் பெருநிலப் பரப்பில் மூண்ட யுத்தத்தைத் தொடர்ந்து தமிழகத்தில் எழுந்த ஈழத் தமிழர் ஆதரவுப் பேரலை பிரதமர் மன்மோகன் சிங்கை உலுப்பி விட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாற்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது இராஜினாமாக் கடிதத்தைத் தமிழக முதல்வர் கருணாநிதியிடம் கையளித்துள்ளனர்.

ஈழத் தமிழர்களின் விடயத்தில் மத்திய அரசு தலையிட்டு உடனடியாகப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்பதே இராஜினாமாக் கடிதங்களை ஒப்படைத்தவர்களின் கோரிக்கை.

மத்திய அரசில் திராவிட முன்னேற்றக் கழகம் பலம் பொருந்திய கட்சியாகவுள்ளது. காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சி புரிவதற்குக் கருணாநிதியே மூல காரணம் எனலாம்.

இந் நிலையில் ஈழத் தமிழரின் விடயத்தில் தலையிடுமாறு மத்திய அரசைத் தமிழக முதல்வர் பல தடவைகள் கேட்டிருந்தும் அதற்கான தகுந்த பதில் வழங்கப்படவில்லை.

இந் நிலையில் தங்கள் பதவிகளையும் தூக்கியெறிவதற்குத் திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாரானபோது மத்திய அரசு அதிர்ந்து போனது.

இந் நடவடிக்கை, எப்படியாவது இலங்கையில் தலையிட வேண்டும் என்ற கட்டாயத்தைப் பிரதமர் மன்மோகன் சிங்கின் அரசுக்கு ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள ஈழத் தமிழர் ஆதரவலை, தமக்கு ஆதரவளித்த திரவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்ற உறுப்பினர்களின் இராஜினாமாக் கடித விவகாரம் என எல்லாமே பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அழுத்தத்தைக் கொடுக்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடனான தொலைபேசி உரையாடல் நடந்துள்ளது.

இந்தியாவை ஓரங்கட்டி விட்டு இலங்கை அரசு தனது படை நடவடிக்கைகளை முன்னெடுப்பதென்பது முடியாத காரியம்.

அதேநேரம் ஈழத் தமிழர் விடயத்தில் மத்திய அரசு தலையிடாமல் – தீர்வைப் பெற்றுக் கொடுக்காமல் காலம் கடத்தும்போது அதனால் தமிழகத்தில் குழப்பம் ஏற்படும் வாய்ப்பும் அதிகரிக்கும்.

இந்த இருவேறு சிக்கலை தவிர்க்க தற்காலிகமாகவேனும் யுத்தத்தை நிறுத்த வேண்டிய தேவை இலங்கை அரசுக்கு உண்டு. யுத்தம் நிறுத்தப்படும் போது ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி. போன்ற கட்சிகள் ஜனாதிபதி மகிந்தவின் அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்க அரசியல் நிலைமை மோசமடையும்.


அதேநேரம் இலங்கை இனப்பிரச்சினைக்கு இறுதியானதும் அறுதியானதுமான தீர்வைக் காண்பதைத் தவிர தமிழகத்தைச் சமாளிப்பதற்கு வேறு எந்த வழியுமில்லை என்ற முடிபை மத்திய அரசு எடுக்க வேண்டிய தேவையும் உள்ளது.

இவையாவற்றுக்கும் மேலாக ஈழத் தமிழர் தொடர்பில் தமிழகத்தில் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் இடம்பெறுவது இந்திய தேசத்தில் பிரிவினைவாத சிந்தனை முளை விடுவதற்கும் வழி வகுத்து விடும் என்ற அச்சம் எல்லாம் சேர்ந்து இலங்கையில் யுத்தத்தை நிறுத்தவே செய்யும்.

# இலங்கை விடயத்தில் இந்திய தலையீட்டுக்கு எதிராக தேசிய விடுதலை முன்னணியின் பிரசாரம் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கை விடயத்தில் அதிகரித்திருக்கும் இந்தியாவின் தலையீடு தொடர்பாக கட்சிகளுடன் கலந்துரையாடும் பிரசாரமொன்றை தேசிய விடுதலை முன்னணி ஆரம்பித்துள்ளது.



விடுதலைப்புலிகளை ஒழிப்பதற்காக வடக்கில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கே இந்தியா முயற்சிப்பதாகத் தெரிவித்திருக்கும் தேசிய விடுதலை முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச விடுதலைப்புலிகளுக்கு எதிரான கட்சிகளை ஒன்றிணைக்க வேண்டிய சூழ்நிலை தற்பொழுது தோன்றியிருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கப் படைகள் விடுதலைப்புலிகளைத்தோற்கடித்து வருவதுடன் மிகவும் அண்மையில் கிளிநொச்சியைக் கைப்பற்றிவிடுவோம் எனக் கூறுகின்றனர். பாரியளவில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகளைத் தடுக்கவேண்டும் என விடுதலைப்புலி ஆதரவாளர்கள் தீர்மானித்துள்ளனர் என விமல் வீரவன்ச கூறியுள்ளார்.

இலங்கை விடயத்தில் தலையிடும் தமிழ் நாட்டு சக்திகளுக்கு உண்மையில் இலங்கைத் தமிழர்கள் மீது அக்கறை இல்லையெனவும் அவர்களுக்கு சொந்த அரசியல் இலாபங்களே முக்கியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் ஜாதிக ஹெல உறுமய, மக்கள் ஐக்கிய முன்னணி, தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள், தமிழர் விடுதலைக் கூட்டணி, முஸ்லிம் தேசிய முன்னணி மற்றும் ஐக்கிய ஜனநாயகக்கூட்டணி ஆகிய கட்சிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த தேசிய விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளது. அத்துடன் இலங்கை விடயத்தில் இந்தியாவின் தலை யீடு குறித்து விவாதிப்பதற்கு எதிர்வரும் 20ஆம் திகதி பாராளுமன்றத்தில் சர்வகட்சிக்குழுவைக் கூட்டுமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கவும் தேசிய விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளது. (இ)

# ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகளுக்கு 200 மில்லியன் ரூபா மீட்புத் திட்டம்முன்வைப்பு

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்றுமதி வரிச்சலுகை (ஜீ.எஸ்.பி.பிளஸ்) நீடிக்கப்படாவிட்டால் ஆடை உற்பத்தித் தொழிற்சாலைகளுக்கு 200 மில்லியன் ரூபா மீட்புத் திட்டமொன்றை முன்வைக்க இலங்கை அரசாங்கம் இணங்கியுள்ளது.

இந்த வருடத்துடன் முடிவடைந்திருக்கும் ஜீ.எஸ்.பிளஸ் வரிச்சலுகையை மேலும் நீடிப்பது தொடர்பில் தொடர்ந்தும் இழுபறி நிலை காணப்படுகிறது. இந்த வரிச்சலுகையை நீடிப்பதற்கு சில நிபந்தனைகளை இலங்கை பூர்த்தி செய்ய வேண்டும் எனத் தெரிவித்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியம் அவை குறித்து விசாரணைகள் நடத்தப்படவேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும் எந்தவிதமான விசாரணைகளையும் நடத்துவதற்கு இடமளிக்கப்போவதில்லையென இலங்கை அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்தே மீட்புத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு இலங்கை அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையால் ஆடை உற்பத்தி நிறுவனங்கள் மோசமாகப் பாதிக்கும் என்பதால் இந்த மீட்புத் திட்டத்தைத் தயாரிக்க அரசாங்கம் முடிவு செய்தது என ஏற்றுமதி அபிவிருத்தி மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் செயலாளர் எஸ்.ரணுகே கூறியுள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்துக்கு ஏற்றுமதி செய்யப்படும் ஆடைகளில் 65 வீதமானவை ஜீ. எஸ். பி. பிளஸ் வரிச்சலுகைக்கு உட்பட்டே ஏற்றுமதி செய்யப்படுவதாக வர்த்தக்த் திணைக்களத்தின் ஏற்றுமதி தொடர்பான தகவல்கள் கூறுகின்றன. எஞ்சிய 35 சதவீதமான ஏற்றுமதிகளாக விவசாயம், மீன்பிடி மற்றும் காலணிப் பொருட்கள் விளங்குவதாக அந்தத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜீ.எஸ்.பி.பிளஸ் சலுகையை இலங்கை இழந்தால் அது பொருளாதாரத்துக்கும் ஏற்றுமதித் துறைக்கும் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என சர்வதேச வர்த்தகத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் எச்சரித்துள்ளார்.

இந்தச் சலுகையை இழந்தால் ஒரு இலட்சம் வேலை வாய்ப்புக்களை இழப்பதுடன் ஏற்றுமதி துறை, ஆடை உற்பத்தி ,விவசாயப் பொருள் உற்பத்திகள் உட்பட அனைத்து ஏற்று மதிக ளும் பாதிக்கும் என 15 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சர வைக் கூட்டத்தில் அமைச்சர் கூறியிருந்தார்.

இங்கிலாந்தின் சசெக்ஸ் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வு ஒன்றில் ஜி.எஸ்.பி. பிளஸ் திரும்பப் பெறப்பட்டால் அது இலங்கையின் மொத்த தேசிய வருமானத்தில் 2 சதவீத நட்டத்தை ஏற்படுத்தும் என கோடிட்டுள்ளார். ஐரோப்பிய ஒன்றியத்தில் ஏற்றுமதித்துறையில் இலங்கையே 2007ஆம் ஆண்டு முதன்மை நாடாக இருந்ததாக குறிப்பிட்ட அவர் இதன் மூலம் இலங்கைக்கு 25 பில்லியன் டொலர்கள் வரையான வருமானம் கிடைத்ததாக குறிப்பிட்டுள்ளார். (இ)

# அதிகார பரவலாக்கல் மூலம் அரசியல் தீர்வு வழங்கிய பின் புலிகளை தோற்கடிப்பது சரியானதாகும்

## 13ஆவது திருத்தச் சட்டத்திற்கான தேசிய குழு கூறுகிறது

(கொழும்பு)

புலிகளின் பயங்கரவாதம் தோற்கடிக்கப்படவேண்டும். அதேவேளை அதிகார பரவலாக்கல் மூலம் அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கான தேசிய குழு எனும் புதிய அமைப்பு தெரிவித்துள் ளது.

அமைச்சர்கள் பலர் அங்கம் வகிக்கும் இக் குழு அண்மையில் நிர்மாண மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சில் சந்தித்த போது மேற்படி தீர்மானத்தை மேற்கொண்டதாக இக் குழுவின் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டிலான் பெரேரா, மேல்மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் குரே, ரஞ்சித் நவரட்ண ஆகியோர் இக்குழுவின் தலைவர்களாக விளங்குகின்றனர்.

முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் கிழக்கு மாகாண சபையை மீண்டும் நிறுவியமையை வரவேற்றுள்ள இக் குழு அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணுமாறும் ஜனாதிபதியைக் கோருவதெனவும் தீர்மானித்துள்ளது.

இத்தகைய அரசியல் தீர்வை வழங்கியபின் புலிகளை தோற்கடிப்பது சரியானதாக அமையும் என அமைச்சர் ராஜித சேனாரட்ண கூறியுள்ளார்.

தமிழகஅரசியல்கட்சிகளின்அழுத்தம் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், தமிழக சட்டமன்றமும் இந்திய மத்திய அரசும் அரசியல் தீர்வு காணுமாறே வலியுறுத்துகின்றன எனத் தெரிவித்துள் ளார்.

தமது திட்டங்களை ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பதற்காக மேற்படி குழு எதிர்வரும் 24ஆம் திகதி மீண்டும் கூடவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள் டியூ குணசேகர , திஸ்ஸ விதாரண , கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் , கிழக்கு மாகாண சபை அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ் புல்லா, ஜனாதிபதியின் ஆலோசகர் வாசுதேவ நாணயக்கார, தென் மாகாண சபை அமைச்சர் பியசிறி , ரஞ்சித் நவரட்ண , குமார் ரூபசிங்க ஆகியோர் இக் குழுவின் கூட்டத்தில் பங்கு பற்றியுள்ளனர். (இ)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி எண்ணத்தின் ஆதிக்கம்



ஓர் அறையில் பல்வேறு இசைக் கருவிகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம் .அவை அனைத்தின் தந்திக்கம்பிகளும் ஒரே போல் சுருதி சேர்க்கப்பட்டுள்ளன.

இப்போது ஒரு கருவியின் தந்தியை மீட்டினால் மற்றக் கருவிகளும் அதே சுரத்தை தரும் விதத்தில் அதிரத் தொடங்குவதை நீங்களும் பார்த்திருப்பீர்கள்.

அதேபோலவே ஒருகுறிப்பிட்ட அதிர்வு நிலையில் உள்ள எல்லா மனங்களும் அதே நிலையில் உள்ள எண்ணத்தால் சம அளவில் பாதிக்கப்படுகின்றன. ஆனால் தூரம் மற்றும் வேறு பல காரணங்களை பொறுத்து இந்தப் பாதிப்பின் தாக்கம் மனத்திற்கு மனம் மாறுபடுகின்றது. என்றாலும் பாதிப்பிற்குள்ளாகும் நிலையிலேயே அந்த மனம் எப்போதும் இருக்கிறது. உதாரணமாக நான் ஒரு தீமை செய்கிறேன் அப்போது என் மனம் குறிப்பிட்ட ஓர் அதிர்வு நிலையில் இருக்கிறது. அப்போது பிரபஞ்சத்தில் அதே அதிர்வு நிலையில் இருக்கும் எல்லா மனங்களும் அந்த அதிர்வால் பாதிக்கப்படலாம். அதுபோலவே நான் நல்ல காரியம் செய்யும் போது என் மனம் வேறோர் அதிர்வு நிலையில் இருக்கும்; அப்போது அதே அதிர்வு நிலையில் இருக்கும் எல்லா மனங்களும் அதனால் பாதிக்கப்படலாம். இப்படி ஒரு மனத்தின் மீது மற்றொரு மனத்திற்குள்ள ஆற்றல் ஓரளவிற்கு அந்த அதிர்வு கூடியும் குறைந்தும் இருப்பதற்கு ஏற்பவே இருக்கும்.

FLICT

| | | |
|---|---|---|
| ගැටුම් | Facilitating | மோதல் |
| පරිවර්තන | Local | நிலைமாற்ற |
| දේශීය | Initiatives for | உள்ளூர் |
| ආරම්භයනට | Conflict | முன்னெடுப்புகளுக்கான |
| පහසුකරණය | Transformation | அனுசரணை |


## செயல் திட்ட முன்மொழிவுகளுக்கான அழைப்பு

சமாதானம் நிலவும் இலங்கைதேசத்தை கட்டி எழுப்புதவற்காக FLICT பணி புரிகின்றது. நல்லாட்சியை மேம்படுத்தல், பன்முகத்தன்மையை ஏற்றல் மற்றும் நிரந்தர சமாதானத்துக்கு பங்களித்தல் என்பவற்றிற்காக இடைவிடாது பணியாற்ற சிவில் சமூகங்களை வலுப்படுத்துவதை தனது நோக்கமாகவும் கொண்டுள்ளது. எமது அமைப்பு நாடு முழுவதும் உள்ள பல்வேறு சமூகக் குழுக்கள் மற்றும் அரச முகவரங்கள் ஆகியவற்றுடன் இணைந்து செயற்படுகின்றது. இக்குழக்கள் நிதி, இயலளவு, அபிவிருத்தி, ஆலோசனை பயிற்சிகள் முதலான உதவிகளை எம்மிடமிருந்து பெற்றுக்கொள்கின்றன.

**FLICT கலாசார நிகழ்ச்சித் திட்டத்திற்கு வழங்கும் ஆதரவு அனைவரையும் சமத்துவமாக மதித்து உள் வாங்கிய ஒரு சமூகத்தினை உருவாக்க கலாசாரா அடையாளங்களை நிலைமாற்றுதல்.**

பன்முக விழுமியங்களை அடிப்படையாகக்கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்குவதற்கு தனிநபர் மற்றும் சமூக மட்டங்களில் மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்து வதற்காக செயற்படவேண்டும் என்பதில் FLICT நம்பிக்கை கொண்டுள்ளது. நீங்கள் சமர்ப்பிக்கும் செயல் திட்டமானது சிங்களவர், தமிழர் ,முஸ்லீம்கள் என்னும் குறுகிய வரையறைகளிலிருந்து விலகி தமக்கென ஒரு பொதுவான அடையாளத்தை விருத்தி செய்யமக்களுக்கு உதவுவதோடு தம்மிடையே உள்ள வேறுபாடுகளை ஜனநாயகரீதியாகவும் வன்முறையற்ற முறையிலும் தீர்த்துக் கொள்ளுவதற்கும் மக்களுக்கு உதவவேண்டும். இந்த செயற்பாடுகளின்இறுதி விளைவு இலங்கையின் கலாசார பன்மைத்துவத்தினை பெருமைப் படுத்துவதாகவும் பன்மை அடையாளங்களை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ளும் ஓர் சூழ்நிலையை உருவாக்குவதாகவும் அமையும்.

**உங்களது செயல் திட்டம் பின்வரும் மாற்றங்களை நோக்கியதாக அமைய வேண்டும்:**

1. பன்மைத்துவமான கலாசாரங்கள் மற்றும் அடையாளங்களை மக்கள் விரும்பி ஏற்றல்.
2. வெவ்வேறு சமூகங்கள் ஒன்றாக பணியுரிந்து பொதுக்குறிக்கோள்களை அடைதல்
3. மக்கள் சமூக –அரசியல் பிரச்சினைகள் குறித்து விமர்சன ரீதியாக சிந்தித்தல்
4. சமூக மாற்றங்களில் மக்கள் உயிர்ப்புடன் பங்கு கொள்ளல்
5. சிவில் சமூக நிறுவனங்கள் தமது சீர்திருத்த செயற்பாடுகளில் ஏற்கனவே உள்ள சமூக ,அரச கட்டமைப்புக்களின் துணையுடன் ஈடுபடுதல்.
6. ஜனநாயகம் மற்றும் சமாதானத்திற்கான ஒரு சமூக இயக்கத்தை கட்டியெழுப்புவதற்கு கலைஞர்கள் ஒன்று சேர்ந்து பணி புரிதல்.
7. இரு மொழிக் கொள்கை மேம்படுத்தப்படுவதோடு மொழிகளுக்கிடையிலான சமத்துவத்தை ஏற்றுக்கொள்ளல்.
8. வர்த்தக ஊடகங்களுக்கான மாற்றீடுகளுக்கு பிரதேச வாய்ப்பு மக்களுக்கு இருத்தல்.

**பின்வரும் தொனிப்பொருள்களில் FLICT முன்மொழிவுகளை எதிர்பார்க்கின்றது.**

- பன்மைத்துவ கலாசார வாழ்க்கை முறை
- முரண்பாடுகளை ஆக்க பூர்வமாக கையாளுதல்
- வரலாறு ஒன்றிணைந்த அடையாளத்திற்கான மூலம்
- ஆக்க பூர்வமான சமூக மாற்றத்திற்காக இளைஞர்கள்
- சமாதானத்தில் பெண்களின் வகிபங்கு
- ஜனநாயகத்திற்கான விமர்சன ரீதியான சமயக்கருத்தாடல்

**செயல் திட்ட வகைகள்**

- குறுந்திரைப்படங்கள் (கதைகள்/விவரணம்)
- வானொலி (நாடகம்/ இடைவினை/ புலனாய்வு நிகழ்ச்சிகள்)
- தொலைக்காட்சி (நாடகம்/விவரணம்)
- அச்சு ஊடகம் (பத்திரிகை/ இலக்கியம் /கல்வி சாதனம்)
- ஓவியம்/ சிற்பம்/உருவாக்கம்/ புகைப்படம்/ கலப்பு ஊடகக் கண்காட்சி செயல் திட்டங்கள்
- இனங்களுக்கிடையான ஒத்துழைப்பினையும் ஆட்சி மற்றும் பொதுவிடயங்களில் குடிமக்கள் பங்கேற்பையும் உருவாக்குவதற்கான அரங்கம்.
- சமாதான கல்விக்கான கலைகளும் கலாசாரமும் (செயலமர்வுகள்/திறன் விருத்திபயிற்சிகள்/ வதிவிடங்கள்/ பரிமாற்று நிகழ்ச்சித் திட்டங்கள்)

**செயல் திட்ட தெரிவின் போது பின்வரும் விடயங்கள் கவனத்தில் எடுக்கப்படும்.**

- செயல் திட்டத்தின் புத்தாக்கத் தன்மை
- குறைந்த செலவில் அதிக பலன்
- மாற்றங்களை உருவாக்குவதற்கான பங்களிப்பின் அளவு, தெளிவாக வரையறுக்கப்பட்ட பங்கு பற்றுநர்கள் மற்றும் கட்டமைப்புகளுடன் தொழிற்படல்.
- வேறுபட்ட சமூகங்கள் பலவற்றை உள்ளடக்கி தொழிற்படக்கூடிய இயலுமை.
- ஏனைய கலைத்துவ / ஊடக நிறுவனங்கள் / பல்கலைக்கழகங்கள்/கல்வி மற்றும் அரச நிறுவனங்கள் முதலியவற்றுடன் உயிர்ப்பான தொடர்புகள் பேணப்படல்.
- சமூக சேவைகள் அமைச்சு அல்லது கலாசார விவகாரங்கள் அமைச்சு முதலிய மத்திய அமைச்சுகளில் நிறுவனம் பதியப்பட்டிருத்தல் வேண்டும்.
- கலாசாரம் மற்றும் கலைத்துறைகளில் போதிய அனுபவம்.
- இதைப்போன்ற சமாதான உருவாக்க முனைப்புகளில் ஈடுபட்ட முன் அனுபவம்.

நீங்களும் உங்கள் நிறுவனமும் மேற்படி பிரமாணங்களை நிவர்த்தி செய்யக் கூடியவர்களாக இருப்பின் சமாதானத்தை உருவாக்கும் நோக்கம் கொண்ட உங்களது செயற்றிட்ட முன்மொழிவுகளை FLICT இற்கு அனுப்பி வைக்கவும்.

முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான படிவங்கள் மற்றும் மேலதிக விபரங்களுக்கு FLICTஅலுவலகத்துடன் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். விண்ணப்ப முடிவுத் திகதி 15.11.2008. படிவங்களை பின்வரும் இணையத்தளத்தில் இருந்தும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். www.flict.org


**FLICT**
21 சிறீபா லேன்
கொழும்பு-5
011-2555247-6
flict@ slt.lk


## இளைஞர்களுக்காக இளைஞர்கள்- முரண்பாடுகளின் நிலை மாற்றம் மற்றும் சமாதானத்தை கட்டி எழுப்புதலுக்கான முன்னெடுப்புகள் ( Youth for youth)

*அறிமுகம்:–*

சமாதானம் நிலவும் இலங்கைதேசத்தை கட்டி எழுப்புதவற்காக FLICT பணி புரிகின்றது. நல்லாட்சியைமேம்படுத்தல், பன்முகத்தன்மையை ஏற்றல் மற்றும் நிரந்தர சமாதானத்துக்கு பங்களித்தல் என்பவற்றிற்காக இடைவிடாது பணியாற்ற சிவில் சமூகங்களைவலுப்படுத்துவதை தனது நோக்கமாகவும் கொண்டுள்ளது. எமது அமைப்பு நாடு முழுவதும் உள்ள பல்வேறு சமூகக் குழுக்கள் மற்றும் அரச முக வரங்கள் ஆகியவற்றுடன் இணைந்து செயற்படுகின்றது. இக் குழுக்கள் நிதி, இயலளவு அபிவிருத்தி , ஆலோசனை, பயிற்சிகள் முதலான உதவிகளை எம்மிடமிருந்து பெற்றுக் கொள்கின்றன.

இலங்கையின் வன்முறைப் போராட்டங்களில் இளைஞர்களே பிரதான பங்கு பற்றுநர்களாக இருந்து வருகின்றனர். இது வரை ஏற்பட்டுள்ளசமூக, பொருளாதார மற்றும் நிதி சார்ந்த இழப்புகளை அளவிட முடியாது. இது இளைஞர் எழுச்சியா? ஒடுக்கப்பட்டவர்களான அவர்களது போராட்டமா? அல்லது கட்டிளைமை பருவத்தின் கிளர்ச்சியா? அல்லது இலங்கை சமூகத்திலும் கலாசாரத்திலும் உள்ளார்ந்திருக்கும் ஒரு பாரிய பிரச்சினையின் வெளிப்பாடா?

சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக பெரும்பாலான செயற்பாடுகள்இளைஞர் தொடர்பானவையாக இருப்பதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை எனினும் இந் நிகழ்ச்சித் திட்டங்களில் பெரும்பாலானவை வளர்ந்தோரினாலேயே வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இவற்றில் இளைஞர்களின்பங்கு மௌனமான பங்கேற்பு மட்டுமே.

**இவ்விடயத்தில் பல வரையறைகள் உள்ளன:**

- இளைஞர்கள் ஆர்வத்துடன் பங்கேற்பதற்குப்பதிலாக கொடுப்பதைப்பெற்றுக் கொள்பவர்களாகவே உள்ளனர்.
- உண்மையான இளைஞர் அபிலாசைகளும் ஈடுபாடுகளும் அவர்களது தேவை குறித்து வளர்நதோர் மேற்கொள்ளும் தீர்மானங்களில் நசுங்கிப் போய் விடுகின்றன.
- இளைஞர்களின்குரலை யாரும் அக்கறையுடன் செவிமடுப்பதில்லை
- பிரதேசங்களின் கட்டமைப்பு பலவீனங்கள்காரணமாக எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளை வாழ்க்கைத் தொழில்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற அபிவிருத்தி தலையீடுகள் வழங்காதவிடத்து விரக்தி அதிகரித்தல்.

இத்தகைய வரையறைகளை நீக்குவதற்காக,இளைஞர்களால் முன்னெடுக்கப்படும் இளைஞர்களுக்கான சமாதான முன்னெடுப்புசெயற்பாடுகளுக்காக அவர்களை விருத்தி செய்து வலுப்படுத்தும் தேவையுள்ளது.

**இளைஞர்களுக்காக இளைஞர்சமாதானத்தைக்கட்டியெழுப்பும் செயற்பாடு என்றால் என்ன?**

- நிகழ்ச்சித் திட்டங்கள் இளைஞர்களால் வடிவமைக்கப்பட்டு செயற்படுத் தப்படுகின்றன. (இவ்விடயத்தில் பிரதானமாக செயற்றிட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களில் பெரும்பான்மையினர் 16–36 வயதுக் கிடைப்பட்டவர்களாகவும் நிறுவனத்தில் தீர்மானம் மேற்கொள்ளலில் குறிப்பிடத்தக்க அதிகாரம் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும்)
- செயற்றிட்டத்தில் பிரதான தீர்மானம் மேற்கொள்வோர் இளைஞர்களாவர்.
- இலக்குக் குழு –இளைஞர்
- வெவ்வெறுஇளைஞர்முன்னெடுப்புகளுக்கிடையில் உயிர்ப்பான ஒத்துழைப்பும் வலையமைப்பும்.
- முரண்பாட்டு தீர்வில் வன்முறையல்லாத முறைகளில் நம்பிக்கை
- தேசத்தில் எதிர்காலத்தில் இளைஞர்களுக்கு மிகமுக்கிய வகிபங்கு உள்ளது என்பதில் நம்பிக்கை
- சமாதான செயற்பாடுகளை அமுல்படுத்தும் அனுபவம் உள்ள பதிவு செய்யப் பட்ட நிறுவனத்தை கொண்டிருத்தல்.

**முன்மொழிவுகளுக்கான அழைப்பு**

மேற்படி வினாக்களுக்குநீங்களும் உங்களது நிறுவனமும் உடன்பாடான துலங்கலைக் கொண்டிருப்பின், முரண்பாடுகள் நிலை மாற்றம் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதலை நோக்கமாகக்கொண்ட செயல்திட்ட முன்மொழிவுகளை உங்களிடமிருந்து FLICT எதிர்பார்க்கிறது.செயல்திட்டங்கள்பின்வருவன தொடர்பாக இருத்தல்.வேண்டும்.

- கலாசார பன்மைத்துவத்தை ஏற்று பன்முக சமூகத்தை மேம்படுத்தல்
- இளைஞர் மத்தியில் இனங்கள் மற்றும் சமயங்களுக்கிடையிலான தொடர்புகளை வலுப் படுத்தல்.
- நல்லாட்சியில் இளைஞர் பங்களிப்பை மேம்படுத்தல்
- இரு மொழிக்கொள்கை மற்றும் மொழிகளுக்கான சமத்துவம் ஆகியவற்றில் மேம்படுத்தல்
- இளைஞர்களுக்கிடையில் தலைமைத்துவம் மற்றும் முரண்பாடுகளின் நிலை மாற்றம் தொடர்பான இயலுமையை விருத்தி செய்தல்.

**முன்மொழிவு படிவம் மற்றும் ஏனைய விபரங்களுக்கு தயவு செய்து FLICT அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.**

***விண்ணப்ப முடிவு திகதி:– 15.11.2008***


**FLICT**
21 சிறீபா லேன்
கொழும்பு–5
011–2555247
flict@ sltnet.lk
www. flict.org.

# அறிமுக பந்து வீச்சாளர் மிஷ்ரா மாஜாயாலம் இரண்டாவது டெஸ்டில் இந்தியா ஆதிக்கம்

(மொகாலி)

காம்பீர்–சேவாக் ஜோடியின் சிறப்பான ஆரம்பத் துடுப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி 2–வது இன்னிங்சில் 301 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளது.

அறிமுக நாயகன் மிஷ்ராவின் துல்லியமான பந்து வீச்சில் அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 268 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.



இதில் முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்த நிலையில் தொடர் சம நிலையில் உள்ளது. தொடரின் 2–வது டெஸ்ட் கடந்த வெள்ளிக்கிழமை மொகாலியில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 469 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சௌரவ் கங்குலி 102 ஓட்டங்களையும் அணித் தலைவர் தோனி 92, டெண்டுல்கர் 88, காம்பீர் 67 ஓட்டங்களையும் மற்றும் ராவிட் 39, சேவாக் 35 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் ஷைடில், ஜோன்ஸன் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களையும் வைற் 2 விக்கெட்டுக்களையும் பிரெட் லீ ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி நேற்று முன்தினம் 2 ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் 4 விக்கெட்டுக்களையிழந்து 102 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மூன்றாம் நாளான நேற்றுத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு ஹசி–வோட்ஷன் ஜோடி நிதானமாக ஆடி ஆறுதல் அளித்தது.

இதில் சிறப்பாக ஆடிய ஹசி அரைச் சதம் கடந்தார். எனினும் ஹசி 54 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து களமிறங்கிய ஹடின் 9 ஓட்டங்களுடனும் வைற் 5 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி 167 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 7 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

எனினும் அடுத்துக் களமிறங்கிய பிரெட் லீ, வோட்ஷனுடன் இணைந்து பொறுப்புடன் ஆடி அவுஸ்திரேலிய அணியை போலோனில் இருந்து மீட்க போராடினர்.

இதில் சிறப்பாக ஆடிய வோட்டின் தனது முதல் டெஸ்ட் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். மறுமுனையில் பிரெட் லீ நிதானமாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை எடுக்க அவுஸ்திரேலிய அணி 200 ஓட்டங்களைக் கடந்தது.


இந்த ஜோடி 8–வது விக்கெட்டுக்காக 73 ஓட்டங்களை எடுத்தபோது பிரெட் லீ 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த ஜோன்ஸன் நிதானமாக ஆட மறுமுனையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்த வோட்டின் 78 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய டைடில் ஓட்டம் எதனையும் எடுக்காமல் ஆட்டமிழக்க அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 268 ஓட்டங்களை எடுத்தது.

இதன் மூலம் அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்சில் இந்திய அணியை விட 201 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின் நிலையில் போலோன் நிலைக்குத் தள்ளப்பட்டது.

பந்து வீச்சில் தனது முதலாவது டெஸ்டில் விளையாடிய மிஷ்ரா 5 விக்கெட்டுக்களை வீழ்த்தியதுடன் ஹர்பஜன் சிங், இசாந்த் சர்மா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் சகீர்க்கான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

போலோன் நிலையில் அவுஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாடும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் இந்திய அணித் தலைவர்.தோனி தனது அணி 2–வது இன்னிங்சில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடும் என அறிவித்தார்.




இதன் அடிப்படையில் முதலாவது இன்னிங்சில் 201 ஓட்டங்கள் முன்னிலையில் இருந்த இந்திய அணி தனது 2–வது இன்னிங்சில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான காம்பீர்–சேவாக் ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாட இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது.

இந்த ஜோடியைப் பிரிக்க பொன்டிங் பந்து வீச்சு, களத் தடுப்பில் பல வியூகங்களை மேற்கொண்ட போதும் பலனளிக்கவில்லை. இந் நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிபில் இந்திய அணி விக்கெட் இழப்பின்றி 100 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதன் மூலம் அவுஸ்திரேலிய அணியை விட 2–வது இன்னிங்சில் 301 ஓட்டங்களால் இந்திய அணி முன்னிலையிலுள்ளது. இதில் சேவாக் 53 ஓட்டங்களுடனும் காம்பீர் 46 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர். நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# துடுப்பாட்டத்திலும் ஹசன் அசத்தல்; பங்களாதேஷ் அணி வலுவான நிலையில்

(சிற்றங்கொங்)

பந்து வீச்சில் ஜொலித்த சகீப் அல் ஹசன் துடுப்பாட்டத்திலும் அசத்த பங்களாதேஷ் அணி இரண்டாவது இன்னிங்சில் 258 ஓட்டங்களால் முன்னிலையிலுள்ளது.

பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம்மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 ஒரு நாள் போட்டிகள், 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் ஒரு நாள் போட்டித் தொடரை நியூசிலாந்து அணி 2:1 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டி கடந்த வெள்ளிக்கிழமை சிற்றங்கொங்கில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி அதன் முதலாவது இன்னிங்சில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 245 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஹீசைன் 83 ஓட்டங்களையும் ரஹீம் 79 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் அணித் தலைவர் டானியல் விக்டோரி 5 விக்கெட்டுக்களையும் ஓ பிறின் 3, பட்டீல் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்சில் 9 விக்கெட்டுக்களையிழந்து 155 ஓட்டங்களை எடுத்திருந்தது.

மூன்றாம் நாளான நேற்றுத் தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி மேலதிகமாக 16 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து 171 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

இதில் அணித் தலைவர் விக்டோரி ஆட்டமிழக்காமல் 55 ஓட்டங்களையும் மக்குலம் 25 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் சகீப் அல் ஹசன் 25.5 ஓவர்கள் பந்து வீசி 36 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 7 விக்கெட்டுக்களையும் ரஷாக், இஸ்லாம் மற்றும் அஷ்ரபுல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு முதலாவது இன்னிங்சில் 74 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலிருந்த பங்களாதேஷ் அணி தனது 2–வது இன்னிங்சில் துடுப்பெடுத்தாடி நேற்றைய 3 ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் 8 விக்கெட்டுக்களையிழந்து 184 ஓட்டங்களை எடுத்திருந்தது.



இதன் மூலம் பங்களாதேஷ் அணி 2–வது இன்னிங்சில் 248 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலுள்ளது. இதில் சகீப் அல் ஹசன் 71 ஓட்டங்களையும் இக்பால் 33, ரகீம் 32 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் டானியல் விக்டோரி 4 விக்கெட்டுக்களையும் பட்டீல் 2 விக்கெட்டுக்களையும் மற்றும் மில்ஸ், ஓ பிறின் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். 4 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# இருபது -20 உலகக் கிண்ண தொடர் 2010 இல் மேற்கிந்திய தீவுகளில்

இந்த ஆண்டு நடைபெறவிருந்த இருபது – 20 உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டிகளை 2010 ஆம் ஆண்டு கரேபியன் தீவுகளில் நடத்த ஐ.சி.சி. முடிவுசெய்துள்ளது. ஐ.சி. சியின் முடிவை ஏற்று 2010 இல் இருபது –20 உலகக் கிண்ணக்கிரிக்கெற் போட்டிகளை கரே பியன் தீவுகளில் நடத்த நாமும் தயாராகி வருகிறோம் என்று தெரிவித்தார் மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெற் அணியின் தலைவர் ஜூலி யன் அன்ட் .

ஆனாலும் போட்டிகள் நடை பெற விருக்கும் திகதிகளை இன்னும் ஐ.சி.சி.முடிவு செய்யவில்லை ஏப்ரல் அல்லது மே மாதங்களில் நடத்த சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஏப்ரல் மாதமளவில் சிம்பாவே அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது.

இதேவேளை ஜூன் மாதமளவில் தென்னா பிரிக்க அணிகளுக்கிடையிலான நான்கு டெஸ்ட் போட்டிகளும் ஐந்து ஒரு நாள் போட்டிகளும் நடைபெறவுள்ளது.

ஐ.சி.சி.யின் முதலாவது இருபது–20 உலகக் கிண்ணப்போட்டிகள் 2007 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# லாராவை விட சச்சின் சிறந்தவர் ஜெயசூர்யா புகழாரம்

(மும்பை)

தொடர்ந்து நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்துவதில் லாராவை விட சச்சின் டெண்டுல்கர் சிறந்தவர் என இலங்கை அதிரடி வீரர் ஜெயசூர்யா தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் டெண்டுல்கர் டெஸ்ட் கிரிக்கெற் வரலாற்றில் அதிக ஓட்டங்களை எடுத்து சாதனை படைத்தார். இவர் மேற்கிந்திய தீவுகள் வீரர் லாராவின் சாதனையை தகர்த்தார். இது குறித்து ஜெயசூர்யா கூறியது,

ரன் மிஷின் லாராவின் விளையாட்டு அதிர்ச்சியடையச் செய்யக் கூடிய வகையில் இருக்கும். ஆனால் கடந்த 19 ஆண்டுகளாக சச்சின் நிலையான ஆட்த்தை வெளிப்படுத்தி வருகிறார். இந்த வகையில் மிகச் சிறந்த வீரராக திகழ்கிறார். 16 வயதில் களமிறங்கிய இவர் அனைத்து அணிகளுக்கு எதிராகவும் அதிக ஓட்களை குவித்துள்ளார். உலகின் நம்பர் –1 அணியான அவுஸ்திரேலியாவுக்கு எதிராக அதிக ஓட்டங்களை எடுத்துள்ளார்.

இலங்கை அணியையும் டெண்டுல்கர் விட்டுவைக்கவில்லை. 18 டெஸ்டில் 7 சதங்களுடன் சராசரியாக 65 ஓட்டங்களை எடுத்துள்ளார். இவர் ஆட்டமிழந்து விட்டால் பாதி இந்திய அணி ஆட்டமிழந்தது போல் ஆகிவிடும். இப்போது இந்த நிலைமை மாறியுள்ளது. இவ்வாறு ஜெயசூர்யா கூறினார். இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் மைக் ஆர் தர்டனும் சச்சினை வெகுவாக புகழ்ந்துள்ளார். இவர் கூறுகையில் டெஸ்ட் கிரிக்கெற்றில் அதிக ஓட்டங்களை எடுத்தவர் என்ற சாதனை இப்போது சரியான நபரிடம் வந்துள்ளது. இருபது ஆண்டுகளாக கிரிக்கெற்றில் ஆதிக்கம் செலுத்தி வரும் சச்சின் எந்த அணியையும் விட்டுவிடவில்லை உலக கிரிக்கெற்றில் சம்பியனாக இருக்கும் அவுஸ்திரேலியா அணியின் ஆதிக்கம் சச்சினின் முன்பாக எடுபடவில்லையே என்றார்.

## தயாநிதி மாறனும்...

கப்பட்டவர் முரசொலி மாறனின் மகன் தயாநிதிமாறன். இவர் மத்திய அமைச்சரவையில் தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சராக பதவி வகித்து வந்தார்.

இந்நிலையில் கடந்த 14ஆம் திகதியன்று தமிழக முதலமைச்சர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இலங்கைப் பிரச்சினையில் இரு வார காலத்துக்குள் மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் தமிழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒட்டுமொத்தமாக பதவி விலகுவது என முடிபு செய்யப்பட்டது.

இந்த முடிபைத் தொடர்ந்து தி.மு.கவின் மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினர்களும், மத்திய அமைச்சர்களும் தங்கள் பதவி விலகல் கடிதங்களை கருணாநிதியிடம் கையளித்தனர்.

இந்நிலையில் தயாநிதி மாறன் பதவி விலகும் கடிதத்தை கருணாநிதியிடம் நேரில் ஒப்படைத்துள்ளார். (ச-5)

## ஆதித் தமிழன் தோன்...

கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். மேலும் அவர் கூறியதாவது,

இலங்கை என்பது தமிழ் மன்னர்கள் ஆண்ட பூமி. அதனால்தான் அது தமிழர்களுக்கு சொந்தமான மண் என்று உரிமை கொள்ளக் கூட எமக்கு வாய்ப்பு இருக்கிறது என்ற தொனியில் எனக்கு முன்னர் பேசியவர் கூறிவிட்டுப் போனார்.

அந்தத் தோழருக்கும் அந்த வரலாற்றை இன்னமும் பிழைபட எழுதிக் கொண்டிருப்பவர்களுக்கும் இலங்கை வரலாற்றை, இலங்கை மண்ணை புரிந்து கொள்ளாத தமிழகப் பெருமக்களுக்கும் ஒரு வரலாற்று உண்மையை நான் சொல்ல விரும்புகின்றேன்.

உண்மையில் சொல்லப்போனால், இலங்கை என்பது பழைய கடற்கோளால் மூழ்கிப் போன லெமூரியா கண்டத்தின் ஓர் எச்சம். மூன்றாம் கடற்கோளில் மூழ்கிப்போனது குமரிக்கண்டம். அதற்கு இலக்கியச் சான்று இருக்கின்றது. அங்கு மூழ்கிப்போன தீவு குமரிக்கண்டம்,நாவரந்தீவு,லெமூரியாக் கண்டம் அது பிளவுபட்டுப்போய் ஒதுங்கிய மூழ்கிய, மலையின் மூழ்காத உச்சிதான் இலங்கைத் தீவு.அந்த லெமூரியாக் கண்டம்தான், அந்தக் குமரிக்கண்டம்தான் ஆதித்தமிழன் பிறந்த பூர்வீக மண்.

ஆகவே தமிழன் தோன்றிய மண் அந்த மண். தமிழன் அவன் தொப்புள்கொடி மண் இலங்கை மண். அந்த மண்ணுக்கு வந்தவர்களால் அந்த மண்ணில் பிறந்தவர்கள் தாக்கப்படுகிறார்கள்.

இன்னும் சொல்லப்போனால் மன்னாரில் இருக்கக் கூடிய பாறையும், மதுரையில் இருக்கக் கூடிய பாறையும் ஆராய்ச்சியாளர்களால் ஆய்வு செய்யப்பட்டபோது ஒரு பூகோளம் என்ற முடிபு எடுக்கப்பட்டது.

மன்னாரின் படிகப்பாறையும்,மதுரையின் படிகப்பாறையும் ஒரே நிலத் தொடர்ச்சி என்று பூகோளம் சொல்கின்றது, வரலாறு சொல்கின்றது.

ஆனால் அங்கு தமிழன் இருக்க இடத்திற்கு போராடிக்கொண்டிருக்கின்றான். உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கின்றான். இந்திய அரசே! இந்தியப் பேரரசே! 110 கோடி மக்களுக்கு உரிமை கொண்ட பேரரசே! உனக்கு ஒரு வார்த்தை. ஒரு இந்தியன் கடைக்கோடித் தமிழன், [illegible]ரமுத்து என்று தமிழை வித்துப் பிழைக்கக் கூடிய தமிழன், இத்தனைக் கலைக்குடும்பத்தின் சார்பில் இத்தனை தமிழ்க்குடும்பத்தின் சார்பில் ஒரு வேண்டுகோள் விடுகின்றான்.

நிலவுக்கு 22 ஆம் திகதி றொக்கெட் அனுப்பப் போகின்றாய்! நிலா பூமியிலிருந்து 3 இலட்சத்து 44 ஆயிரத்து 400 கிலோமீற்றருக்கு ஏவுகணை அனுப்பப் போகின்ற நீ! 16 கிலோமீற்றர் தூரத்திலுள்ள இலங்கையைக் கவனிக்காதிருப்பதில் என்ன நியாயமென்று கேட்கின்றோம்.

இங்கு 16 கிலோமீற்றரில் தமிழன் செத்துக் கொண்டிருக்கின்றான்.தமிழச்சி செத்துக் கொண்டிருக்கின்றாள் என்றார். (ச-5)

## அக்கராயன்குளத்...

பகுதியில் இரு தரப்பினருக்கும் இடையில் நேற்று முன்தினம் அதிகாலை முதல் கடும் மோதல்கள் இடம்பெற்றன.

அதிகாலை 5 மணிமுதல் சுமார் 13 மணித்தியாலங்கள் இந்த மோதல்கள் தொடர்ந்தும் இடம்பெற்றுள்ளன.மோதல்களின் போது இரு தரப்பிலும் உயிர்ச் சேதங்கள் பல ஏற்பட்டதுடன் மேலும் பலர் படுகாயங்களுக்கும் இலக்காகிய நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதனை அடுத்து மோதல்களில் ஈடுபட்ட இராணுவத்தின் 57ஆவது படையணியினரால் அக்கராயன்குளம் பகுதியைச் சுற்றி விடுதலைப் புலிகளால் நிர்மாணிக்கப்பட்டிருந்த 3கிலோமீற்றர் நீளமான அணைக்கட்டு ஒன்று கைப்பற்றப்பட்டது.

அத்துடன் அப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் 14 பதுங்குகுழிகளும் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை கிளிநொச்சி, நாச்சிக்குடா வன்னேரிக்குளம், மணியன்குளம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டம், ஆந்தன்குளம் பகுதிகளிலும் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இம் மோதல்களின் போது இரு தரப்பினருக்கும் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன. இம் மோதல்களின் போது புலிகளின் பிரதான நிலைகள் சிலவற்றையும் படையினர் கைப்பற்றியுள்ளனர் என்றார். (ச-5)

## தமிழ்நாட...

தலைவர்களை கேடயமாக பயன்படுத்தி இந்திய அரசு மூலம் இலங்கைக்கு நெருக்கடி தர முயற்சி செய்கின்றனர்.

இதை இலங்கை அரசு எதிர்பார்த்தது. ஏனெனில் இப்போதைய நிலையில் புலிகளுக்கு இதைத்தவிர வேறுவழியில்லை. எனினும் அவர்கள் இராணுவ தாக்குதலில் இருந்து தப்பிக்க முடியாது என்றார்.

ஒரு நாட்டின் பிரச்சினையில் தலையிடாமல் இருக்கவேண்டும் என்பதை பார்த்துக் கொள்ள வேண்டியது இந்திய மத்திய அரசாங்கத்தின் பொறுப்பு.

தமிழ் நாட்டுக்கு ஏதும் பிரச்சினைகள் இருந்தால் இலங்கை அரசாங்கத்துடன் அந்த அரசாங்கம் பேச்சு நடத்தலாம். இதனை விடுத்து இந்திய மத்திய அரசை மற்றொரு நாட்டின் மீது ஆக்கிரமிப்பை மேற்கொள்ள கூறுவது ஏற்றுக்கொள்ள கூடிய செயல் அல்ல என கோத்தபாய தெரிவித்துள்ளார். (ச-5)

## கலைவிழா

சுழிபுரம் மேற்கு பாரதி கலைமன்ற பாரதி முன்பள்ளிச் சிறார்களினதும் பழைய மாணவர்களினதும் கலைவிழா சுழிபுரம் மேற்கு ஸ்ரீகதிர் வேலாயுதசுவாமி ஆலயத்துக்கு அருகில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளிப் பெற்றார் சங்கத்தலைவர் திருமதி ஜெ.சுதாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், வலி.மேற்குப் பிரதேசசபைச் செயலாளர் சு.புத்திசிகாமணி பிரதமவிருந்தினராகவும், சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தியாசாலை அதிபர் சி.சிவகணேசசுந்தரன், மூளாய் ஐ.என்.எஸ்-ஜி.டி. நிறுவன இயக்குநர் திருமதி பொ.இராஜேஸ்வரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-49)

## இந்.பிரதம...

அழைப்பு விடுத்திருந்தார்.

இதற்கு அமைய இந்தியாவுக்கு சென்றுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பினர்,தொடர்ந்தும் அந்த சந்திப்புக்கான வாய்ப்புகளை எதிர்பார்த்துள்ளனர்.

அத்துடன் இந்திய அரசாங்கத்துடனும் அவர்கள் தொடர்புகளை மேற்கொண்டு வருகின்றனர் என தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

## அரசுக்கு அழுத்தம் கொடுக்க...

இலங்கை அரசு நியமிக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் அதன் மூலம் உலகை ஏமாற்ற இலங்கை அரசு முயற்சிக்கும்என்றும் அவர் கருத்து வெளியிட்டார்.

இது குறித்து அவர் தமிழோசைக்கு வழங்கிய செவ்வி வருமாறு,

***கேள்வி:*** தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழக அரசியல் கட்சி தலைவர்களை சந்தித்து இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக சந்தித்து உரையாடியுள்ளனர்.

இந்நிலையில் இது தொடர்பில் உள்நாட்டில் போதிய அழுத்தத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கொடுக்கவில்லை என்று கூறப்படுகின்றதே?

***பதில்:*** நாங்கள் அரசாங்கத்துக்கு கோரிக்கை விடுத்திருக்கின்றோம். மக்களை பாதுகாக்கவேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. மக்கள் சார்பில் நாங்கள் நாடாளுமன்றத்தில் கேள்வியை எழுப்புகின்றபொழுது செவிசாய்க்கின்ற பழக்கம் அரசுக்கு இல்லை. அதுதான் உண்மை.

***கேள்வி:*** இப்பொழுது இந்தியாவுக்குச் சென்று தமிழக அரசியல் கட்சி தலைவர்களைச் சந்தித்து இந்திய அரசு வந்து தலையிடக்கோரும் முகமாக தொடர்ந்து பலவிதமான அழுத்தங்களைக் கொடுத்து நீங்கள் வருகிறீர்கள்.

தமிழகத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவிகளைத் துறக்க முன்வந்துள்ளார்கள். தி.மு.க உறுப்பினர்கள் தங்களது கட்சியின் தலைவர்களிடம் இராஜினாமாக் கடிதங்களையும் கொடுத்துவிட்டார்கள்.

இதேபோன்று இலங்கையில் அழுத்தம் கொடுப்பதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் தங்களது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகளை துறக்கவேண்டுமென்ற விமர்சனம் எழுந்துள்ளது. அதற்கு என்ன சொல்கிறீர்கள்.

***பதில்:*** நாங்கள் பதவி துறப்பது பெரிய விடயமல்ல. 1983ஆம் ஆண்டு நாங்கள் 16 பேர் நாடாளுமன்றத்தில் இருந்து விலகினோம். ஆனபடியால் நாங்கள் பதவி துறப்பது பெரியவிடயமல்ல. ஆனால் இலங்கை அரசாங்கம் நாங்கள் பதவியைத் துறந்தால் அவர்களுடைய பொம்மைகளை வைத்துக் கொண்டு உலகத்தை ஏமாற்றுவதற்கு அவர்கள் முயற்சிப்பார்கள்.

ஆனால் பதவி துறக்கவேண்டியிருந்தால், துறக்கவேண்டிய தேவை ஏற்பட்டால் நாங்கள் ஒருபோதும் பின்நிற்க மாட்டோம்.

***கேள்வி:*** 1983ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பவங்களை குறிப்பிட்டு கருத்துக்களை வெளியிட்டீர்கள் அந்தக் காலகட்டத்தில் அவ்வாறு இலங்கை நாடாளுமன்றத்தில் இருக்கும் தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர் அனைவரும் இராஜினாமாச் செய்ய முன்வந்த நடவடிக்கையை அடுத்துத்தான் இந்தியாவின் கவனமும் மற்றைய உலக நாடுகளின் கவனமும் உடனடியாக இலங்கையின் பக்கம் திரும்பியது என்கின்ற கருத்து மிகவும் ஆழமாக வைக்கப்படுகின்றது.

அதேபோன்றதொரு நிலைப்பாட்டை தற்பொழுது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எடுக்குமா என்கின்ற கேள்விக்குறிகள் எழுந்துள்ளனவே?

***பதில்:*** இந்தியாவினுடைய கவனம் திரும்பிவிட்டது. இந்தியா தற்போது இலங்கைப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணவேண்டும் என்ற அடிப்படையில் செயற்பட்டுக் கொண்டு வருகின்றது. எங்களுடைய இராஜினாமா அதை ஊக்குவிப்பதற்கு மேலதிகமான தேவை என்பதை நாங்கள் நினைக்கவில்லை. ஆனால் தேவையாக இருந்தால் அதைச் செய்வதற்கு நாங்கள் தயங்கமாட்டோம்.

***கேள்வி:*** இந்தியா இலங்கை விடயத்தில் தலையிட்டு என்ன செய்யவேண்டும்? என்ன செய்ய முடியும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்.

***பதில்:*** எதைச்செய்ய வேண்டுமோ அதைச் செய்யவேண்டும் அவ்வளவுதான். தமிழ்மக்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தாங்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசத்தில் சுயாட்சியை கேட்டிருக்கிறார்கள். நாங்கள் 60 வருடமாக அதைக் கேட்டிருக்கிறோம்.

நாங்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசத்தில் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் எமக்கு சுயாட்சி வழங்கப்படவேண்டும் எனக் கேட்டிருக்கின்றோம்.

அது மறுக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எதைத்தான் செய்யவேண்டியிருந்தாலும் செய்யவேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம். (ச-3,5)

## பூநகரியில்...

நடத்தியது. அதில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் சிறுவனும் பெண்ணும் அடங்குவர்.

கிளிநொச்சி நகரில் உள்ள பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ள இருவரில் பெண் கடுமையான காயங்களுக்கு உட்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கொல்லப்பட்டவர் திருநாவுக்கரசு ஜெகதீஸ் (வயது 25) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

செம்மன்குன்று பல்லாயைச்சேர்ந்த ஜெயராணி (வயது 45), மனோஜ் (வயது 13) ஆகியோர் காயமடைந்துள்ளனர். (ச-5)

## இராமேஸ்வரத்தில் திரண்ட...

தமிழ்த்திரையுலகத்தினர் சார்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இராமேஸ்வரத்தில் 2 ஆயிரம் பேர் பங்கேற்ற மிகப் பிரமாண்டமான பேரணி மற்றும் பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது.

தமிழ்த் திரையுலகத்தின் பல்வேறு பிரிவினர் இக் கூட்டத்தில் பங்கேற்று தங்களது உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

ஈழத்தில் தமிழர்களை படுகொலை செய்யும் மகிந்த ராஜபக்ஷவை கைது செய்து சிறையில் அடைக்கும் காலமும் வரும், தமிழீழத் தமிழர்களுக்கானதனி நாட்டை உருவாக்குவோம் என்றும் அறைகூவல் விடுத்தனர்.

சென்னையில் இருந்து தமிழ்த்திரையுலகைச் சேர்ந்த டைரக்டர்கள்,நடிகர்கள் மற்றும் சினிமா தொழில் நுட்பக் கலைஞர்கள் இராமேஸ்வரத்துக்கு தனி சிறப்பு ரயிலில் நேற்றுக் காலை சென்றனர். பிற்பகல் 2.30 மணியளவில் இராமேஸ்வரம் அக்கினி தீர்த்த கடற்கரைக்கு அருகில் உள்ள தமிழ்நாடு ஹோட்டல் முன்பு திரையுலகப் பிரமுகர்கள் திரண்டனர்.

அங்கிருந்து இலங்கை அரசுக்கு எதிராக கோஷமிட்டபடி பேரணி தொடங்கியது. இந்தப் பேரணியை டைரக்டர் பாரதிராஜா கொடியசைத்து தொடங்கி வைத்தார். டைரக்டர்கள் கே.எஸ்.ரவிக்குமார், எஸ்.ஏ.சந்திரசேகர், பாக்கியராஜ், செல்வமணி,டி.ராஜேந்தர், அமீர், பாலாஜி சக்திவேல், மனோபாலா, வேல்முருகன் மற்றும் நடிகர்கள் கார்த்திக், பார்த்திபன், வடிவேலு, மனோஜ்குமார் உட்பட ஆயிரத்து 400பேர் பேரணியில் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு இல்லத்தில் தொடங்கிய பேரணி ரத வீதிகள், ரயில்வே றோட், நடுத்தெரு வழியாக நான்கு முனை றோட்டுக்கு வந்தது.

அங்கிருந்து பொதுக்கூட்டம் நடைபெறும் கிழக்காடு பகுதிக்கு பேரணியாக செல்ல அனுமதியளிக்கப்படவில்லை. இதனால் நான்கு முனை றோட்டில் இருந்து திரையுலகப் பிரமுகர்கள் பஸ்கள் மூலம் பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்திற்கு சென்றனர்.

இந்தப் பிரமாண்ட பொதுக் கூட்டத்தில் திரையுலகப் பிரமுகர்கள் கலந்து கொண்டு பேசினார்கள். திரையுலகப் பேரணி மற்றும் பொதுக் கூட்டத்தை முன்னிட்டு இராமேஸ்வரத்தில் ஆயிரத்துக்கும் அதிகமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். (ச-5)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி றஜனி ரவீந்திரநாதன் அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி அழகம்மா தில்லைநாதன்

*(ஓய்வு பெற்ற ஆசிரியை)*

அவர்கள் காலமானமையையிட்டு எமது கண்ணீரைக் காணிக்கையாக்கி அஞ்சலிக்கின்றோம்.

-பணியாளர் அவை,
யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை

கோப்பாய்

(C-1698)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.